Registered as Newspaper

# உதயன்

வீழ்வோமென்று நினைத்தாயோ...!

2,3 ஆம் பக்கங்களில்

சுடர் : 36 | கதிர் : 74 | திங்கட்கிழமை | தை 26 ஆம் நாள் 08 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

# வெடித்தது மக்கள் புரட்சி

## பொலிகண்டியில் பேரணி நிறைவு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 8

தமிழ்பேசும் மக்களை இலக்கு வைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்தும், வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகவும் நடத்தப்பட்ட "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை கவனவீர்ப்புப் பேரணி பெரும் மக்கள் எழுச்சியுடன் நடை பெற்று முடிந்தது. 19




படம்: குமணன்

### பொலிகண்டிப் பிரகடனம்

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம் சுயநிர்ணய உரிமை தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் தமிழ் இனத்தின் மீது மேற் கொள்ளப்பட்ட தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற இன அழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டும். இதன்பால் தொடர்ச்சியாக ஜனநாயக வழியில் போராடுவோம் என உறுதி எடுத்துக் கொள்கின்றோம்.



## மக்கள் உற்சாகம்



யாழ்ப்பாணம், பெப்.8

தமிழ்பேசும் மக்களை இலக்குவைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்தும், வடக்கு, கிழக் கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின 19

## மலரும் நினைவுகள்

யாழ்ப்பாணம், பெப்.8

தமிழ்பேசும் மக்களை இலக்குவைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்தும், வடக்கு, கிழக் கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகவும் ஏற்பாடு செய் யப்பட்டிருந்த "பொத்துவில் முதல் பொலிகண்டிவரை" கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று பெரும் எழுச்சியு டன் நடந்து முடிந்தது.

நீண்ட காலத்தின் பின்னர் ஆயிரக்கணக் 19



## உலகம் ஏற்கும் திசையில் எமது போராட்டத்தை நகர்த்துவோம்!

விரிவு - பக்கம் 4

## பொலிஸார் வில்லத்தனம்

யாழ்ப்பாணம், பெப்.8

"பொத்துவில் முதல் பொலிகண்டி வரை" கவ னவீர்ப்புப் பேரணி நேற்று பொலிகண்டியில் நிறைவடைந்தது.

இந்தப் போராட்டம் பருத்தித்துறை நோக்கி நகர்ந்தபோது, நீதிமன்றத் தடை உத்தரவைக் காட்டி மந்திகை, மடத்தடி வீதியின் 19

## மயங்கி வீழ்ந்த தாய்

யாழ்ப்பாணம், பெப்.8

தமிழ்பேசும் மக்களை இலக்குவைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அடக்கு முறைகளைக் கண்டித்து நடந்த "பொத்துவில் முதல் பொலிகண்டிவரை" கவனவீர்ப்புப் போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்க ளின் உறவினர்களும் கலந்து 19



கவனவீர்ப்புப் பேரணி பொலிகண்டி நோக்கி நகரும்போது நல்லூரில் உள்ள தியாகி திலீபன் நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## பல்கலைக்கழக தூபிக்கு முள்ளிவாய்க்கால் மண்!

யாழ்ப்பாணம், பெப்.8

முள்ளிவாய்க்காலில் இருந்து எடுத்துவரப்பட்ட "முள்ளி வாய்க்கால் மண்", யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி யில் பயன்படுத்துவதற்காகக் கையளிக்கப்பட்டது.

தமிழ்பேசும் மக்களை இலக்குவைத்து இலங்கை 19

## முஸ்லிம்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், பெப்.8

தமிழ்பேசும் மக்களை இலக்குவைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்தும், வடக்கு, கிழக் கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகவும் முன்னெடுக்க ப்பட்ட "பொத்து 19

# வீழ்வோம் என்று நினைத்தாயோ..!














படங்கள் ஐ.சிவசாந்தன்,குமணன்













# வீழ்வோம் என்று நினைத்தாயோ..!





























# உலகம் ஏற்கும் திசையில் எமது போராட்டத்தை நகர்த்துவோம்!

## வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், பெப்.8

**எமது நீதிக்கான போராட்டத்தை உலகம் ஏற்கும் திசைநோக்கி மிகத் தீவிரமாக போராட்ட அரசியலைத் தமிழ் மக்களாகிய நாம் அணி திரண்டு நகர்த்த வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன், போராட்டங்களுக்கு அனைவரும் வீரியமான ஒருங்கிணைந்த செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என பொத்துவில் தொடக்கம் பொலிகணடிவரை போராடடம் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றது.**

**இவ்வாறு வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

நாம் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக எமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வருகின்றோம். தமிழராகிய நாம் இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு ஒருங்கிணைந்த நிலப்பரப்பைத் தாயகமாகக் கொண்ட ஒரு தேசிய இனம். எங்கள் தலைவிதியைத் தீர்மானிக்கும் சகல உரிமையும் எமக்கு உள்ளது. எமது இந்தப் பிறப்புரிமையைத் தொடர்ச்சியாக மறுதலித்து எம்மை அடக்கி ஆள்வதற்கே சிறிலங்கா தேசம் விளைகின்றது. அத்துடன் சிறிலங்கா பேரினவாத அரசு தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நாம் எமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி சாத்வீகப் போராட்டங்களை மேற்கொண்டோம். அந்தப் போராட்டங்கள் வன்முறையின் ஊடாக அடக்கப்பட்டதால், ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டோம். தமிழ் மக்களின் இந்த தேசிய ஆயுதப் போராட்டம் சிறிலங்கா பேரினவாத அரசால் கொடுங்கரம் கொண்டு மிகப் பெரும் மனிதப் பேரழிப்பினூடாக முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டது.

இந்த இறுதிப்போரின்போது இறுதி ஆறு மாதங்களில் மட்டும் 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட எமது உறவுகள் கொல்லப்பட்டதை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக் குழுவின் 2012 கார்த்திகை மாத அறிக்கையில் தெரிவித்துள்ளார். கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். 2017ஆம் ஆண்டு மாசி மாதம் உண்மைக்கும், நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டமானது தமிழ்ப் பெண்களை "பாலியல் அடிமைகளாக" கையாளப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் நட்த்தப்பட் "பாலியல் வன்முறை முகாம்கள்" பற்றிய விவரங்களை ஐ.நா.விடம் கையளித்தது. ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் 2013 சித்திரை மாதத்துக்குரிய அறிக்கைக்கு அமைவாக, தமிழர் தாயகத்தில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போர் விதவைகள் உள்ளனர். இவ்வாறு நீண்ட நெடிய காலமாக இனவழிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் எமது இனத்துக்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது.

போர் நிறைவடைந்து கடந்த 11 ஆண்டுகளில் வடக்கு கிழக்கை இராணுவமயமாக்கி வரும் சிறிலங்கா அரசாங்கம், தமிழ் மக்களின் கலாசார, பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதுடன், வடக்கு கிழக்கு பூர்வீகக் குடிமக்களான தமிழர்களின் இனப்பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி, தமிழ்த் தேசியததை சிதைவடையச் செய்து, அவர்களின் இருப்பை இல்லாமல் செய்வதற்கான பல வகையிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

வனப் பாதுகாப்புத் திணைக்களம், நிலவளத் திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு மற்றும மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக பௌத்த. மயமாக்கல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை சிறிலங்கா அரசாங்கம் முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகின்றது. வடக்கு கிழக்கில் உள்ள சுமார் 200க்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த தமிழ் ஆலயங்களைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப் பட்டும், அமைக்கப்படுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான நில- அபகரிப்புகளும், பௌத்த சிங்கள மயமாக்கல்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

தமிழ் தாயகம் எங்கும் நிலைகொண்டிருக்கும் சிங்கள இராணுவம் உனடியாக அகற்றப்படுவதுடன், இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். சிவில் நிர்வாகங்களில் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படுதல் உடனடியாக நிறுத்தப்படுவதுடன், தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்களும், அதற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடு த்துவரும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் அச்சுறுத்தப்படுவதுடன், அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இது அவர்களின் பேச்சுரிமை, நடமாடும் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். அத்துடன் தமிழர் தரப்பில் உருவாகும் விடுதலைக்காக தன்னெழுச்சியான அரசியல் வெளியினை ஒடுக்குவதில் சிங்கள பௌத்த பேரினவாத அரசு குறியாகவே உள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்தும், பூர்வீக வாழிடங்களை அபகரித்து சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல் தரைக் காணிகளை அபகரிதது சிங்களக் குடியேற்றம் ஒன்றை உருவாக்க முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. மட்டக்களப்பில் உள்ள தமிழ் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்குடன் பால்தரும் பசுக்களை திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யும் நடவடிக்கைகளும் நடந்தேறி வருகின்றன. இதன் ஒரு கட்டமாக தமிழ்ப் பூர்வீக நிலங்களில் வணங்கள் அழிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான தமிழரின் வாழ்வாதாரங்களை அழிக்கும் நடைவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட காணிகள் உடனடியாக மீளக் கையளிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையைத் தொடர்ச்சியாக மறுதலித்துவரும் இந்த சிங்கள பௌத்த அரசானது. தமிழர்களின் நினைவுத் தூபிகள், அடையாளங்களை அழிப்பதில் முனைப்பாகச் செயற்படுகின்றது. இந்த நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் பலரையும் கைது செய்து பல வருடங்களாகத் தடுத்து வைத்துள்ளனர். இஸ்லாமிய சகோதரர்களையும் இதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தித் தற்போது தடுத்து வைக்கத் தொடங்கியுள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுவதுடன், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் யுத்த மற்றும் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

பல வருடங்களாகத் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டும்.

தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட முறையில் நடைபெறும் சிங்கள அதிகாரிகளின் நியமனங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இஸ்லாமிய மக்களின் மத ரீதியான பாரம்பரிய சமய சடங்கான ஜனாஸாக்களைப் புதைக்கும் செயற்பாடுகளை இல்லாது செய்து ஜனாஸாக்களை இச்சிங்கள பௌத்த பேரினவாத அரசு எரியூட்டி வருகின்றது. இதற்கு எதிராகப் போராடும் முஸ்லிம் சமூகத்தையும் அடக்கி ஆள முனைகின்றனர். இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட்டு இஸ்லாமிய மக்களின் அடிப்படை மத உரிமை மதிக்கப்பட வேண்டும்.

அத்துடன் மலையக தமிழ் மக்கள் தங்களது நாளாந்த வாழ்வாதாரத்துக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கேட்டுப் போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படுவதுடன், அவர்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

மேற்தரப்பட்ட அனைத்துக்கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களும், தமிழ் மக்களும் முன்னெடுத்த தன்னெழுச்சிப் போராட்டம் வலியுறுத்தி நிற்கின்றது.

ஈழத் தமிழராகிய நாம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு "சிறிலங்காவை இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்தக் குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்ற த்துக்கு பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ.நா. பொதுச் சபை போன்றவை எடுக்க வேண்டும் என்று இப்புதிய தீர்மானத்தில் உறுப்பு நாடுகளை வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அனுப்பி வைத்திருந்தோம். அதற்குப் பிற்பாடு ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளரும், சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் பாரப்படுத்தும் ஆலோசனையை முன்மொழிந்துள்ளதை வரவேற்பதோடு, அதை நடைமுறைப்படுத்துவதற்கு வலியுறுத்திக் கோருகின்றோம்.

மேலும் தமிழ் மக்கள் மீது புரியப்பட்டுள்ள இனப்படுகொலை மீண்டும் நிகழாது இருப்பதற்கான உத்தரவாதமாக, தமிழ் மக்கள் தமக்கான நிரந்தர அரசியல் தீர்வை வெளிப்படுத்துவதற்கான சர்வதேசத்தால் கண்காணிக்கப்படும் பொதுசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றோம்.

இந்த விடயங்களை ஐக்கிய நாடுகள் சபைக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் பொருத்தமானமுறையில் கொண்டுபோய்ச் சேர்ப்போம்.

சிங்கள தேசத்தில் மாறி மாறி ஆட்சியில் அமரும் அரசுகள் ஒருபோதும் எமக்கான உரிமைகளை அங்கீகரிக்கப் போவதில்லை என்ற பட்டறிவில்தான் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதியையும், தமிழர் தேசத்துக்கான அங்கீகாரத்தையும் வேண்டி நாம் போராடி வருகின்றோம். எமது நீதிக்கான போராட்டத்தை உலகம் ஏற்கும் திசைநோக்கி மிகத் தீவிரமாக போராட்ட அரசியலைத் தமிழ் மக்களாகிய நாம் அணி திரண்டு நகர்த்த வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் போராட்டங்களுக்கு அனைவரும் வீரியமான ஒருங்கிணைந்த செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என பொத்துவில் தொடக்கம் பொலிகணடிவரை போராடடம் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றது.

என்றுள்ளது. (எ)

# ஐ.நாவுக்கு அஞ்சோம்: அமைச்சர் சரத் வீரசேகர தெனாவட்டு

கொழும்பு, பெப்,8

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கைக்கு எச்சரிக்கை விடுக்க முடியாது. அவ்வாறு விடுக்கப்பட்டாலும் அதற்கு அஞ்சமாட்டோம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரச உயர்பதவிகளுக்கு ஓய்வு பெற்ற படை அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்துள்ளார். அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியான ஜோ பைடன் கூட ஓய்வுபெற்ற படை அதிகாரிகளை நியமித்துள்ளார். ஏன் அவரிடம் கேள்வி எழுப்பப்படுவதில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டாலும் அதற்கு அஞ்சமாட்டோம். பல நாடுகள் எமக்கு ஆதரவாக உள்ளன என்றார்.

அதேவேளை, ஜெனிவா தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போதே ஜெனிவாவில் இணை அனுசரணை வழங்கப்பட்டது. அதன் தாக்கம்தான் தற்போதும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது. ஜெனிவா பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுளில் ஒன்றாக அமெரிக்கா 2017 இல் மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறியது. பக்கச் சார்பாக செயற்படுதாகவும் குற்றச்சாட்டு முன்வைத்தது. எனவே, எமது நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருக்கின்றோம். குற்றச்சாட்டுகள் ஏற்புடையவை அல்ல-என்றார்.

(ப-44)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொலிகண்டி முடிவல்ல!

மீண்டுமொரு மக்கள் புரட்சி நடந்து முடிந்திருக்கிறது. "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை" போராட்டம் அறிவிக்கப்பட்டபோது, இவ்வளவு தூரம் பேரெழுச்சியை உண்டாக்குமென்று ஏற்பாட்டாளர்களே நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் இந்த ஜனநாயகப் போராட்டத்தின் முதல் நாளில் இருந்தே மக்களின் தன்னியல்பான பங்கேற்பு ஊற்றெடுக்கத் தொடங்கியது.

"பொங்கு தமிழுக்கு பின்னர் இப்போதுதான் இதுபோன்ற மக்களின் தன்னியல்பான எழுச்சியைக் காணமுடிந்தது" என்று இந்தப் பேரணியைப் பார்த்தவர்களும், பங்கேற்றவர்களும் சிலாகிக்குமளவுக்கு சன சமுத்திரம் பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை நீண்டு, பெருக்கெடுத்திருந்தது.

இந்தப் பேரணியில் அரசியல்வாதிகள் சிலர் கலந்துகொண்டிருந்தாலும், அவர்களின் கட்சி அரசியல் அங்கு முக்கியத்துவம் பெறவில்லை. பல்லாயிரக்கணக்கான பங்கேற்பாளர்களில் அவர்களும் ஒரு பகுதியாகவே கலந்து கொள்ளவேண்டியிருந்தது. அப்படி கட்சி சார்பில்லாமல், இந்தப் பேரணியை மக்களின் போராட்டமாக வடிவமைத்தமையும் இந்தப் பேரெழுச்சிக்கு ஒரு காரணம்.

இன்னொரு காரணம், வழக்கம்போல தனியே வடக்கு, கிழக்கு தமிழர்களின் பிரச்சினையை மட்டும் கையிலெடுக்காமல், இம்முறை மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் என்று இலங்கையின் ஒட்டுமொத்தச் சிறுபான்மையினத்தவர்களினதும் பிரச்சினைகளை வெளிப்படுத்த நினைத்தமை தான். இதனால் சகல சிறுபான்மையினரினதும், பொது அமைப்புகளினதும் ஆதரவு எவரும் வலிந்து கேட்காமலேயே இந்தப் பேரணிக்கு பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரைக்கும் கிடைத்திருந்தது.

மூன்றாவது காரணம், மிகமுக்கியமானது. அது, இப்போதைய அரசியல், அடக்குமுறைச் சூழமைவு. கிட்டத்தட்ட ஒரு போர்க்காலச் சூழலில் தான் சிறுபான்மை மக்களை ராஜபக்ச அரசு வைத்து வேடிக்கை பார்க்கின்றது மலையகத் தமிழர்களின் உழைப்பை உறிஞ்சும் தோட்டக் கம்பனிகளுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்க்தைக் கொடுக்கச் சொல்லி உத்தரவிடதிராணியற்ற இதே அரசுதான், முஸ்லிம் மக்கள் கதறியழுது, கெஞ்சியபோதும் கொரோனாவால் இறந்த முஸ்லிம்களின் உடலங்களை எரித்தே ஆவோம் என்று கங்கணம் கட்டுகின்றது.


இதே பிடிவாதத்தை தோட்டக் கம்பனிகளிடம் காட்டியிருந்தால், மலையக மக்களுக்கு எப்போதோ ஆயிரம் ரூபா சம்பளம் கிடைத்திருக்குமே? உலக நாடுகள் எல்லாமே கொரோனாவால் இறந்தோரின் சடலங்களை நிலத்தில் அடக்கம் செய்கையில், இலங்கை அரசாங்கம் மட்டும் புதுக்கதைகள் சொல்லி, ஜனாஸாக்களை எரிப்பது ஏன்? இது முஸ்லிம்கள் மீதான அரச இயந்திரத்தின் வக்கிரமான அடக்குமுறையின் வெளிப்பாடே தவிர வேறொன்றுமில்லை.

மலையக மக்கள், முஸ்லிம்கள் என்று ஏனைய சிறுபான்மை இனங்களையே வதைக்கும் ராஜபக்ச அரசாங்கம், தமிழர்களை மட்டும் நிம்மதியாக இருக்கவிடுமா என்ன? தொல்லியல் ஆய்வுகள் என்ற போர்வையில் தமிழர் நிலங்களைச் சூறையாடுதல், விகாரை கட்டுதல், அரசியல் கைதிகள் விடயத்தைக் கண்டுகொள்ளாமல் இருத்தல், மக்களின் காணிகளை படையினர் வசம் பலவந்தமாகப் பிடுங்குதல், நினைவேந்தல் உரிமையை மறுத்தல், ஜனநாயகப் போராட்டங்களைத் தடுத்தல், ஊடகங்களின் குரல்வளையை நசுக்குதல் என்று போர்க்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அத்தனை வேலைகளையும் இப்போது மீண்டும் செய்யத் தொடங்கியிருக்கிறது கோத்தாபய அரசு.

எனவே இந்த நெருக்கடியான சூழமைவால் ஒடுக்குதலுக்கு உள்ளான மக்கள், தமது எதிர்ப்புக்குரலைப் பதிவுசெய்ய ஏதாவது ஒரு வெளி கிடைக்காதா என ஏங்கிக் கொண்டிருந்த தருணத்தில் தான், 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' போராட்டம் முளைகொண்டது. எனவே தம் மீதான அடக்குமுறைகளை வெளிப்படுத்தும் களமாக மக்கள் இந்தப் போராட்டத்தை தேர்வு செய்ய, மிகப்பெரிய ஜனநாயக எழுச்சி பதிவாகியிருக்கிறது.

வெறுமனே கோஷங்களோடும்,பேரணியோடும் இந்த எழுச்சிப் பொறியை பொலிகண்டியோடு அணைய விடாமல், அதை உரிமைத் தீயை தொடர்ந்து தகிக்கச் செய்வதன் மூலமே அதிகாரத்தின் பேரிருளை விலகச் செய்யலாம். காலமும், சூழலும் தமிழர்களுக்கு மீண்டுமொரு வாய்ப்பைத் தந்திருக்கிறது. பொலிகண்டி முடிவல்ல, சிறுபான்மையினரின் ஜனநாயக ரீதியிலான உரிமைப் போருக்கு ஆரம்பமாகட்டும்!

### இன்றைய கருத்தோவியம்




நன்றி சஜித் பண்டார

# கடலரிப்பைத் தவிர்ப்பதற்கு கண்டல் தாவரங்களை நடுக!

## சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், பெப். 8**

**காரைநகர் கடற்கரைப் பகுதிகளில் அண்மைக்காலமாக கடலரிப்பு மிகவும் அதிகரித்துள்ளது. இந்தப் பேராபத்தைத் தவிர்ப்பதற்காக கண்டல் தாவரங்களை நடுகை செய்ய அனைவரும் முன்வர வேண்டும் என்று தன்னார்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.**



காரைநகர் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

காரைநகர் மருதபுரம் நீலங்காடுப் பகுதியில் அண்மைக் காலமாக கடலரிப்பு அதிகரித்துள்ளது. அணைக்கட்டுகளை செய்வதற்கு பல மில்லியன்கள் செலவாகும். தற்போதிருக்கும் நிலையில் இது சாத்தியமில்லாததும்கூட. ஆனால் குறைந்த செலவுடன் கண்டல் தாவரங்களை நடுகை செய்வதன் மூலம் இந்தக் கடலரிப்பில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம். மாப்பனபுரியில் 2 ஆயிரம் கண்டல் தாவரங்களை நடுகை செய்தோம். அது வெற்றியளித்துள்ளது. 50 வீதமான தாவரங்கள் அழிவில் இருந்து தப்பித்துள்ளன. பொதுவாக கண்டல் தாவரத்தின் அழிவு வீதம் அதிகம் என்று சொல்லப்படுகின்றபோதிலும் எமக்கு இது பின்னடைவாகத் தெரியவில்லை. ஆதலால் தன்னார்வலர்கள் மற்றும் பொது அமைப்புகள் இந்தக் கண்டல் தாவரங்களளக் கொள்வனவு செய்து கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், கடற்றொழில் திணைக்களம், சூழற்பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் கடற்படை ஆகிய தரப்புக்களின் உதவியுடன் நடுகை செய்தால் அது பேருதவியாக இருக்கும் - என்றனர்.

(ம-319)

# தடுப்பூசிக் கொள்வனவுக்கு தனியாருக்கு அனுமதியில்லை

கொழும்பு, பெப்.8

வெளிநாடுகளில் இருந்து கொரோனாத் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதி இலங்கையில் உள்ள தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படவில்லை என கொரோனா ஒழிப்புக்கான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

எனினும், தனியார் மருத்துவமனை ஊழியர்களுக்குத் தடுப்பூசிகளைச் செலுத்தச் சந்தர்ப்பம் வழங்குமாறு, மருத்துவமனைத் தரப்பினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(வ-இ)

# நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்தி விளைநிலங்கள் அதிகரிக்கப்படும்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

**வவுனியா, பெப். 8**

**வடக்கில் நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்தி விளைநிலங்களை அதிகரிக்கும் பல்வேறு செயற்றிட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.**

வவுனியாவுக்கு நேற்றுப்பயணம் மேற்கொண்ட அவர் குளம் சீரமைப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்தார். அதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்த தாவது:

நாட்டின் தேசிய உற்பத்திக்கு ஊக்க மளிக்கின்ற சிந்தனையின் வெளிப் பாடாக இத்தகைய திட்டங்கள் முன் னெடுக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நாடு இது. முன்னர் அரிசியை பெரு மளவில் இறக்குமதி செய்திருந்த நிலமையையும் நாம் கண்டிருக்கிறோம்.

அந்தவகையில் விவசாயப்புரட்சி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ப தனை அடிப்படையாகக்கொண்டு ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் ஒரு திட்டமே இது. தற்போது மாகாண விவசாயத் திணைக்களத்தில் ஏற்பட் டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எமக்கு அனுமதி கிடைத்துள்ளது. அத னைச் செயற்படுத்தி வருகிறோம்.

இதன்மூலம் விவசாயத் திணைக்களத் தின் சேவைகளை மேலும் மேம்படுத் துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள் ளது.

இதேவேளை, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்வதற்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்க ளுக்கு 20 மில்லியன் ரூபாவை விடு வித்துள்ளேன். நெல் கொள்வனவு செய்வதற்காக 4 வீத வட்டியில் பணம் விடுவிப்பதற்கான தீர்மானமும் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர் பாக அதனுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சர் வடக்கிலே அதனை முன்னெடுக்கவுள்ளார்.

நீர்ப்பாசனம் மட்டுமல்லாமல் விவசா யம், விவசாயப்பொருள்களை சந் தைப்படுத்துவதன் மூலம் விவசாயி களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த் தும் செயற்பாடுகளும் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

இவைபற்றி மாகாண நிர்வாகமான நாம் மத்திய அரசுடன் தொடர்ந்து பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறோம். மேலதிகமாக நீர்த்தேக்கத் திட்டங் களை அமைப்பதற்கும் அதனூடாக குடிதண்ணீர் வழங்குதல் மற்றும் விளை நிலங்களை அதிகரிப்பதற்குமான செயற்றிட்டங்களையும் மத்திய அரசும் மாகாணமும் இணைந்து முன்னெ டுக்க இருக்கின்றன - என்றார். (த-110)

# அக்கராயனில் மனைப்பொருளியல் கண்காட்சி

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி அக்கராயனில் மனைப்பொருளி யல் கண்காட்சி நாளைமறுதினம் முற்பகல் 10 மணிக்கு அக்கராயன் கெங்கா தரன் குடியிருப்பு பொது மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கரைச்சிப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலை யத்தால் இந்தக் கண்காட்சி நடத்தப்பட வுள்ளது. (ந-13)



வவுனியாவில்

# கொரோனாவால் இறந்த மருத்துவருக்கு அஞ்சலி!

வவுனியா, பெப். 8

கொரோனாத் தொற்றால் உயிரிழந்த மருத் துவர் கயான் தந்தநாராயணவுக்கு வவுனி யாவில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந் திரகுமார் கண்ணன் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உயிரிழந்த மருத்துவரது திருவுருவப் படத்துக்கு மாலை அணிவிக் கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

கொரோனாத் தொற்றால் பீடிக்கப்பட்ட இந்த மருத்துவர் காலி - கராப்பிட்டிய மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், கடந்த வாரம் உயி ரிழந்தார். அவர் ராகம வைத்தியசாலையில் பணியாற்றி வந்தவராவர்.

இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த முதலாவது மருத்துவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-110)

# நெற் பயிர்களில் 'எரிபந்த' நோய்!

## கவலை தெரிவிக்கும் விவசாயிகள்

முல்லைத்தீவு, பெப். 8

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் நீர்பா சனத்திட்டத்தின் கீழ் உள்ள பாண்டியன்குளம் கிராமத்தில் வயல் நிலங்களில் பயிரிடப்பட்ட நெற் பயிர்கள் எரிபந்த நோய்த் தாக்கத்துக்கு உள்ளா கியுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவிக் கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த வருடம் பருவமழைக் காலம் பிந்தி ஆரம் பித்த நிலையில், கடந்த டிசெம்பர் மாதமளவி லேயே எங்களால் நெல்விதைப்பு மேற்கொள்ளப் பட்டது.

தற்போது இரண்டு மாதங்கள் கடந்துள்ள பயிர்க ளில் நெற் கதிர்கள் வர ஆரம்பித்துள்ள நிலை யில், இந்த எரிபந்த நோய் பயிர்கள் மீது தாக் கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் நெற்பயிர்கள் மஞ்சள் நிறத்துக்குள்ளா கிக் கருகிப்போவதுடன் நெற்கதிர்கள் வீரியம் குன் றிய நிலையில், குறைந்த அளவிலான நெல் லையே விளைவிக்கின்றன.

காலம் பிந்திய மழை காரணமாக எங்களின் விதைப்புக் காலமும் பிந்தியது. மற்றைய பிரதே சங்களில் பயிரிடப்பட்ட நெல் அறுவடை முடியும் தறுவாயிலுள்ளது.

எங்கள் பயிர்கள் இப்பொழுது தான் குடலைப் பருவத்தில் இருக்கின்றன. அறுவடைக்கு இன் னும் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாள்கள் கடக்க வேண்டியுள்ளது.

வவுனிக்குளத்தின் நீர்ப்பாசனத்தின் கீழ், 2 ஆயி ரத்து 300 ஏக்கருக்கும் மேல் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் ஆயிரத்து 100 ஏக்கர் அளவில் கீரிச்சம்பா நெல் பயிரிடப்பட்டுள்ள நிலையில், எரிபந்த நோய் பெருமளவில் கீரிச்சம்பா நெற்பயிர்களையே தாக் குகின்றது. விவசாயத் திணைக்களத்தால் பரிந்து ரைக்கப்பட்ட கிருமி நாசினிகளை விசிறிய போதும், சிறிது நாள்கள் அடங்கு நிலையிலிருக் கும் இந்த நோய்த்தாக்கம் பின்னர் வேகமாக பர வுகின்றது - என்றனர். (ந-12)



# குளங்கள் புனரமைப்புத் திட்டம்; வவு. ஆலடிக்குளத்தில் ஆரம்பம்

வவுனியா, பெப். 8

நாடு பூராகவும் 5 ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியாவில் 100 குளங்கள் புனர மைக்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்ப நிகழ்வு வவுனியா செட்டிக்குளம் பெரியதம்பனை ஆலடிக்குளத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. வவுனியா மாவட்டச் செயலர் சமன் பந்துல சேன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இவ் ஆலடிக் குளமானது 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-110)

# புற்றுநோயாளர் தொகை நாளாந்தம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 8

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய தினமும் 80 நோயாளர்கள் இனங் காணப் படுகின்றனர் என்று தேசிய புற்றுநோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் ஜானகி விதான பத்திரன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் வருடாந்தம் புற்றுநோயால் 15 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்றும் அவர் தெரி வித்துள்ளார். (த-இ)

# மஞ்சளுடன் ஒருவர் கைது

75 இலட்சம் ரூபா பெறுமதியான ஆயிரத்து 500 கிலோ கிராம் நிறையுடைய மஞ்சளு டன் ஒருவர் நேற்று அதிகாலை கைதுசெய் யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கற்பிட்டிபள்ளி வாசல்துறை அம்மாதோட்டம் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கை யில், மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலை யிலேயே இவ்மஞ்சள் கைப்பற்றப்பட்டுள் ளது. (வ-இ)

# 'இடியன்' துப்பாக்கியுடன் தருமபுரத்தில் ஒருவர் கைது

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இடியன் துப்பாக்கி ஒன்றைப் பொலிஸார் நேற்று மீட்டனர். அதை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைதுசெய் துள்ளோம் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன் றில் இன்று முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-316)

# மனித உரிமை மீறல்கள் நடக்கவே இல்லையாம்!

## முஸம்மில் எம்.பி எகத்தாளம்

**கொழும்பு, பெப்.8**

**தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தில் அடைய முயற்சித்த இலக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பிரேரணைகள் ஊடாக புலம்பெயர் அமைப்புக்களுக்கு பெற்றுக்கொடுக்க முயற்சிக்கிறது. இலங்கையில் இறு திக்கட்டப் போரில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என்பதற்கான தகுந்த ஆதாரங்களை அரசு மனித உரிமைகள் கூட்டத்தொடரில் பகிரங்கப் படுத்தும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இந்த மாதம் இடம்பெறவுள்ள 46 ஆவது கூட்டத்தொடர் தீர்மானமிக்கதாக அமையும். மனித உரிமைகள் ஆணையாளர் இதுவரை இராணுவத்துக்கு எதிராகவே குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். ஆனால் தற்போது அரசுக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். இலங்கை தொடர்பில் அவர் கடந்த மாதம் வெளியிட்ட அறிக்கை நாட்டின் சுயாதீனத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. 30 வருட காலப் போர் முழு நாட்டுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

2009 மே மாதம் 27 ஆம் திகதி இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முதலாவது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச இந்த விடயத்தைப் பொறுமையாகக் கையாண்டார்.

போரின்போது மனித உரிமை மீறல்கள் ஏதும் இடம்பெறவில்லை என்றும், சர்வதேச போர்க் கோட்பாடுகளுக்கு அமையவே போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் இலங்கை அரசு சிறந்த முறையில் செயற்பட்டுள்ளது என்றும் பரணகம ஆணைக்குழுவின் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை என சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் கவனம் செலுத்தவில்லை. குற்றச்சாட்டுக்கள் பொய் என்பதை இம்முறை அரசு பகிரங்கப் படுத்தும் - என்றார். (பு)

## லொறி மோதியதில் ஒருவர் உயிரிழப்பு!

திருகோணமலை, பெப்.8

திருகோணமலை கந்தளாய் தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியால் பயணித்த ஒருவர் மீது லொறி மோதியதில், அந்த நபர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடந்துள்ளது என்று கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்போபுர, கந்தளாய்ப் பகுதியைச் சேர்ந்த சேனக்க திஸாநாயக்க (வயது43) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார். இதையடுத்து லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது கந்தளாய் மருத்துவமனைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-இ)

## 1087 இலங்கையர்கள் நாட்டை வந்தடைவு

கொழும்பு, பெப்.8

கொரோனாப் பரவலால் வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் ஆயிரத்து 87 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர். 22 விமானங்கள் மூலம் நேற்றுக் காலை வரை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேர காலப்பகுதியில் இவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர். அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (வ - இ)


## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் மாணிக்கம்

சரசாலை வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மாணிக்கம் அவர்கள் நேற்று (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற திலகவதி, கனகமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அம்பிகாதேவி மற்றும் சரஸ்வதி, விஜயலட்சுமி, அற்புதராணி, செந்தில்நாதன், புனிதராணி (கனடா), கணேசலிங்கம், கமலினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் இரத்தினசிங்கம், தவரட்ணம், காலஞ்சென்ற யோகராசா, மற்றும் சுசீலா, ரஜீதலிங்கம், வளர்மதி, மனோதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மகிமா, சியாமா, வருண், பவறஞ்சினி, பகிர்தினி, சரண்யா, ராகுலன் (அவுஸ்ரேலியா), கவிவர்மன், சுஜீவன், யுகதீபன், கம்சாயினி (கனடா), பிரவின், பிரிதா (லண்டன்), சுஜீபன், கஜோதினி, தர்மின், பிரவின் (கனடா), சைமன், கஜீவன், வர்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரக்ஷன், நேருஜா, ரக்ஷிதா, லக்ஸ்மிதா, துவாரகா, ஹரிகேஷ், டர்வின், அஸ்வின், அகர்வின், ஆதிரயன், கனுசியா, லகிஸ்னா, இனியன், அதிபன், மகிபன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2021) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 616 1855
076 414 3311

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

தோற்றம்
31
.
03
.
1979



மறைவு
07
.
02
.
2021

### திரு விஸ்வநாதர் பாலரூபன்

(தகவல் தொடர்பாடல் தொழிநுட்பபாட சிரேஷ்ட ஆசிரியர்
யா/புனித பத்திரிசியார் கல்லூரி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதர் பாலரூபன் நேற்று (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் திரு.திருமதி விஸ்வநாதர் (ஓய்வுபெற்ற கணித ஆசிரியர்) தவமணி தம்பதியரின் அன்பு மகனும், திருமதி மாதினி பாலரூபன் (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும், குகசாயினி பாலரூபன் (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பாலரூபன் கவிசயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி பவிதா சுகந்தன் (லண்டன்), திரு பவனீதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு சுகந்தன் (லண்டன்), திருமதி சர்மினி பவனீதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மதுஷன், கயலினி ஆகியோரின் பாசமிகு மாம னாரும், மிருஷ், ஜீவிதா ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும், கோகுலன் (உதவி அதிபர், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), தாட்சாயினி (முகாமைத்துவ உதவியாளர், சங்கானை பிரதேச செயலகம்), காயத்திரி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், யாழ்ப்பாண விவசாயத் திணைக்களம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் (உடுவில்) நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக பிற்பகல் 2.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லவ் லேன் (8ம் கிளை சங்கம் அருகில்)
உடுவில், சுன்னாகம்.

தகவல்:
கோகுலன் (மைத்துனர்)
077 176 6257

# இ.போ.ச பஸ் சேவை நாளாந்தம் வேண்டும்!

## கண்ணகைபுரம் மக்கள் கோரிக்கை!



**கிளிநொச்சி, பெப்.8**

**கிளிநொச்சி கண்ணகைபுரத்துக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்ஸை நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்துமாறு கண்ணகைபுர கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கண்ணகைபுரம் கிராம அலுவலர் ப.சபாரட்ணம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிராம மட்டக் கலந்துரையாடலின் போது இந்தக் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

அவர்கள் மேலும் தெரிவித்த தாவது,

1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் குடியேற்றத் திட்டத்தில் 350 குடும்பங்கள் வாழ்கின்றன. தேர்தல் காலத்தில் மட்டும் இந்தக் கிராமத்துக்கு பஸ் வருகின்றது. ஏனைய காலங்களில் பஸ் வருவதில்லை.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மேட்டுப் பயிர்ச்செய்கைக்குரிய கிராமங்களில் ஒன்றான கண்ணகைபுரத்தில் ஆரம்பப் பாடசாலை மட்டும் உள்ளது.

இடைநிலை, உயர்தர வகுப்புகளுக்கு நான்கு கிலோ மீற்றரிலுள்ள முக்கொம்பன் மகா வித்தியாலயத்துக்கும், ஏழு கிலோ மீற்றரிலுள்ள அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கும் மாணவர்கள் நடந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினர், மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று வரக்கூடிய வகையில் பஸ் சேவைகளை நடத்த வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பஸ்ஸைக் காணாத கிராமங்களில் ஒன்றாகக் கண்ணகைபுரம் விளங்குகின்றது என்றனர். (ற-13)



## பூமலந்தான் கிராமத்திலுள்ள 11 பேருக்கு காணி உறுதிகள்

மன்னார், பெப். 8

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பூமலந்தான் கிராமத்தில் வாழ்ந்துவந்த 11 குடும்பங்களுக்கு மன்னார் ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான காணிகள் நன்கொடையாக நேற்று வழங்கப்பட்டன. காணிகளுக்கான உறுதிகள் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் நிதி அனுசரணையில் தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு மடு வீதியில் அமைந்துள்ள புனித சிந்தாத்துரை அன்னை ஆலயத்தில் அருட்தந்தை வி.றொசான் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மாவட்டச்செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல், மடு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி வினோஜிதா, மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் குழுமத் தலைவர் ஜாட்சன் பிகிராடோ ஆகியோர் கலந்துகொண்டனர். (த-56,213)



## காப்பெற் வீதிகளில் காயவிடப்படும் நெல்

வவுனியா, பெப். 8

தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடை செய்யப்பட்டுவரும் நிலையில், நெற்தளம் இன்றி பிரதான வீதிகளில் நெல் காயவைக்க வேண்டியுள்ளது என்று நெற்செய்கையாளர்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், மற்றும் முல்லைத்தீவு போன்ற பிரதான வீதிகளில் நெற் செய்கையாளர்கள் நெற்களை காயவைத்து வருகின்றனர்.

இவ்வாறு வீதிகளில் காயவைப்பதால் வீதிகளில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களும் அதிகம் இருக்கின்றன.

நெற்தளம் இன்மையாலேயே பிரதான வீதிகளில் நெல் காயவிடுகின்றோம். நெற்தளம் அமைத்தால் அதில் காயவிட முடியும் என்று செய்கையாளர்கள் கூறுகின்றனர். (த110)

## மாணவர்கள் இடைவிலகல் கண்ணகைபுரத்தில் அதிகரிப்பு

### தடுத்துநிறுத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கண்ணகிபுரம் கிராமத்தில் பாடசாலை மாணவர்கள் இடைவிலகும்எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கிராமத்தில் தரம்1 தொடக்கம் தரம்5 வரையான வகுப்புகளைக்கொண்ட ஆரம்ப தமிழ்க் கலவன் பாடசாலை உள்ளது. தரம் 6 தொடக்கம் இடைநிலைக்கல்வியை தொடர்வதற்காக முக்கொம்பன் வித்தியாலயம் மற்றும் ஸ்கந்தபுரம் இலக்கம் 2பாடசாலை, அக்கராயன் மகா வித்தியாலயம் போன்றனவற்றுக்கு மாணவர்கள் சென்றுவந்தனர்.

ஆயினும், கொரோனா முடக்கத்தைத் தொடர்ந்து பாடசாலைகள் மீளவும் ஆரம்பித்து ஒருமாதத்தை கடந்துள்ள போதும் கண்ணகிபுரம் பகுதி மாணவர்கள் பலர் பாடசாலைக்குச் செல்லாது இடைவிலகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இந்தக் கிராமத்தின் கல்விச் செயற்பாட்டில் மாணவர்களை ஊக்கப்படுத்த சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று கிராமத்தின் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுக்கின்றன. (த-12)



## ஒருங்கிணைப்புச் செயலர் அலுவலகம் திறந்து வைப்பு

வவுனியா, பெப்.8

கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவின் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்புச் செயலாளர் அலுவலகம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன திறந்து வைத்தார். வவுனியா, மன்னார் வீதியில் உள்ள கலைமகள் விளையாட்டு மைதானம் அருகில் குறித்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. விமல் வீரவன்சவின் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்பு செயலாளராக ம.புஸ்பதேவா நியமிக்கப்பட்டுள்ளார். (வ-18)

## பிள்ளைகளின் தவறை மறைப்பதால் சமூகத்தில் பல்வேறு பாதிப்புக்கள்

### உளநல மருத்துவர் சுட்டிக்காட்டு

வன்னேரிக்குளம், பெப். 8

பிள்ளைகளின் தவறுகளை பெற்றோர்கள் மூடிமறைப்பதன் காரணமாகவே சமூகத்தில் பிள்ளைகள் தவறான வழிகளில் பயணிக்கின்றனர். அதனால் சமூகம் பல்வேறு விளைவுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது என்று கிளிநொச்சி உளநல மருத்துவர் மா.ஜெயராசா தெரிவித்தார். கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் பெற்றோர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இளைய தலைமுறையினர் பல்வேறு உள நெருக்கடிகளுடன் வாழ்கின்றனர். மாவட்ட மாணவர்களிடையே போதைப் பொருள் பாவனை காரணமாக பெரும் உளப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. பெற்றோர்கள் போதைப்பொருள்களுக்கு அடிமையானதால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மாணவர்களும் போதைப்பொருள்களின் பாவனையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது சமூகத்தில் பல்வேறு விளைவுகளை உருவாக்கும். உள நெருக்கடியுடனேயே இளைய தலைமுறை வாழ்கின்றது. சமூகத்துக்குப் பயந்து பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள்மீது நடவடிக்கை எடுக்காமல் விடுகின்றமையால் பிள்ளைகள் தவறான வழிகளில் செல்ல வழியேற்படுத்தி விடுகின்றன.

பிள்ளைகள் மருந்து குடித்துவிட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால் பிள்ளைகளுடன் கலந்துரையாடல்களை நாம் நடத்துகின்றோம். அதன்போதே, பிள்ளைகள் உளப் பாதிப்புகளுடன் உள்ளார்கள் என்பது வெளிப்படையாகத் தெரியவருகின்றது. பிள்ளைகளை அன்பாக அவர்களுடைய மனநிலையைப் பேணி பாதுகாப்பான கலந்துரையாடல்களில் பெற்றோர்கள் ஈடுபட வேண்டும். தற்கொலைகள் கிராமங்களில் இடம்பெறும்போது கிராம அலுவலர்கள் தற்கொலை விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். அதில் நாமும் இணைந்து கொள்வோம். பாடசாலைகளில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்த விழிப்புணர்வு செயற்பாடுகள், கொரோனாப் பிரச்சினை காரணமாக கைவிடப்பட்டுள்ளன. மாணவர்களுடன் கலந்துரையாட முடியவில்லை. பாடசாலைகளின் அதிபர்கள் எமக்கு நேரம் ஒதுக்கித்தரும்போது மாணவர்கள் மத்தியில் உளநலத்துடன் சம்பந்தப்பட்ட விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் - என்றார். (த-13)

# தினச்சந்தையை திறக்குமாறு வவு.வியாபாரிகள் போராட்டம்

**வவுனியா, பெப்.8**

**வவுனியா மொத்த மரக்கறி வியாபாரச் சந்தையைத் திறக்க பொலிஸார் அனுமதிக்காததால், வியாபாரிகள் மற்றும் கடைகளின் உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் வீதியை மறித்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். எனினும் திங்கட்கிழமை சந்தை திறக்கப்படும் என்று வழங்கப்பட்ட வாக்குறுதியை அடுத்து அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது.**



கொரோனாத் தாக்கம் காரணமாக ஹொறவப்பொத்தான வீதியில் அமைந்துள்ள வவுனியா தினச் சந்தை கடந்த சில நாள்களாக மூடப்பட்டிருந்தது. குறித்த சந்தையின் வியாபார நடவடிக்கைகள், காமினி மகாவித்தியாலயம், மற்றும் கண்டி வீதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையம் ஆகியவற்றில் தற்காலிகமாக முன்னெடுக்கப்பட்டது. சந்தை ஊழியர்கள் மற்றும் சந்தைக் கடைத் தொகுதிகளின் உரிமையாளர்களுக்கு பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் ஆகிய பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அவர்களில் எவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படாததால் மீண்டும் சந்தையைத் திறப்பதற்கு சுகாதாரப் பிரிவினர் அனுமதி வழங்கியிருந்தனர். நகரசபையின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை தினச்சந்தை தொற்று நீக்கம் செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை சந்தையைத் திறப்பதற்காக ஊழியர்கள் மற்றும் சந்தையின் கடைத் தொகுதி உரிமையாளர்கள் வந்த போது பொலிஸார் அவர்களுக்கு அனுமதியளிக்கவில்லை. இதனால் பொலிஸாருக்கும் ஊழியர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. தீர்வு கிடைக்காததால் ஹொறவப்பொத்தான பிரதான வீதியை வழிமறித்த ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்கள் மரக்கறிகளை வீதியில் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் வியாபாரிகளுடன் விவசாயிகளும் கலந்துகொண்டனர்.

சம்பவ இடத்துக்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் லால்செனவிரத்ன ஆகியோர் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினர். நாளை திங்கட்கிழமை முதல் சந்தையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் வாக்குறுதியளித்தனர் இதற்கமைய போராட்டம் கைவிடப்பட்டது. போராட்ட இடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான காதார் மஸ்தான், செல்வம் அடைக்கலநாதன், குலசிங்கம் திலீபன் மற்றும் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். (ப-110,18)

# உண்ணிக் காய்ச்சல் பாதிப்பு; தென்மராட்சியில் அதிகரிப்பு

சாவகச்சேரி, பெப்.8

தென்மராட்சிப் பிரதேசத்தில் நெல் அறுவடை ஆரம்பித்ததையடுத்து உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் 44 பேர் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில், இம் மாதம் நேற்று வரையான முதல் 6 நாள்களில் 13 பேர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. நெல் அறுவடையில் ஈடுபடுவோர், வெள்ளம் வடிந்த பகுதிகளில் பற்றைகளைத் துப்பரவு செய்வோர் மற்றும் கால்நடைகளைப் பராமரிப்போர் ஆகியோரே அதிகமாக குறித்த காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். மேற்குறித்த வேலைகளில் ஈடுபடுவோர் வேலை முடிந்து வீடு திரும்பியதும் தாம் அணிந்த ஆடைகளை நன்கு உதறிக் கழுவுவதுடன், தாமும் நன்றாகக் குளித்து விட்டு வேறு ஆடைகளை அணிந்து கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (வ-9)

# முல்லை. கிராமங்களில் யானைகள் அட்டகாசம்

முல்லைத்தீவு, பெப்.8

முல்லைத்தீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களுக்குள் இரவு வேளைகளில் புகும் காட்டு யானைகள் மக்களின் தென்னை மரங்கள் மற்றும் நெல் வயல்களை அழித்து வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிராம மக்கள் தெரிவித்ததாவது: ஒதியமலை, சம்மளங்குளம், பெரியகுளம், தண்டுவான், இத்திமடு உள்ளிட்ட பல கிராமங்களில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது குறித்த கிராமங்களில் நெல் அறுவடைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் யானைகள் பயிர்ச்செய்கைகளுக்கு தொடர்ந்தும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் பெரும் வாழ்வாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திலும், கிராம மட்டங்களிலும் நடைபெற்ற கூட்டங்களில் யானை வேலிகளை அமைத்துத்தருமாறு அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக பலதடவை கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை அதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை - என்றனர். (ஐ-13)

# விவசாய பண்ணையில் பிள்ளையார் ஆலயம்!

யாழ்ப்பாணம், பெப்.8

துணுக்காய் ஒளிரும் வாழ்வு நிறுவனத்தின் கீழ், இயங்கி வருகின்ற அனிஞ்சியன்குளம் ஒருங்கிணைந்த இயற்கை விவசாயப்பண்ணையில் சிறிய அளவிலான புதிய பிள்ளையார் ஆலயம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்ததுடன், பண்ணை அலுவலகத்துக்கான நினைவாக மரக்கன்று ஒன்றையும் நட்டுள்ளனர்.

இந்த நிறுவனத்தின் கீழ் இயங்கி வரும் மூன்று சுய உதவிக்குழுக்களின் அங்கத்தவர்களுக்கான கடனுதவித் திட்டமும், வங்கியில் பணம் வைப்பிலிடப்பட்ட கணக்குப் புத்தகங்களும் சிறுவர் நிதியத்தின் நிதி அனுசரணையுடன் ஓஹான் நிறுவனத்தால் வழங்கப்பட்டன. முற்றுமுழுதாக மாற்றுத்திறனாளிகளைக் கொண்டு இந்த நிறுவனம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-222)

# இரண்டாகிறது கிளி. கல்வி வலயம்: மத்திய கல்வி அமைச்சும் அனுமதி

கிளிநொச்சி, பெப்.8



கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான கல்வி அமைச்சின் எழுத்து மூலமான அனுமதி வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அந்த அனுமதியை கடந்த வெள்ளிக்கிழமை கையளித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் உள்ள விவசாயபீடத்தின் ஆய்வுப் பயிற்சிக் கட்டடத் தொகுதியைத் திறக்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே அமைச்சர், குறித்த அனுமதியை ஆளுநரிடம் கையளித்துள்ளார்.

104 பாடசாலைகள், 32 ஆயிரத்து 28 மாணவர்கள் மற்றும் 2 ஆயிரத்து 35 ஆசிரியர்களை உள்ளடக்கி, கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை என நான்கு கோட்டக் கல்வி அலுவலர் பிரிவுகளுடனும் தனி ஒரு வலயமாக கிளிநொச்சி கல்வி வலயம் இது வரை காலமும் இயங்கியது.

எனவே கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று நீண்ட காலமாகக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அதற்கான முன்னேற்பாடுகள் மாவட்டம் மற்றும் மாகாண மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த நிலையில் மத்திய கல்வி அமைச்சின் அனுமதியும் தற்போது கிடைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ப-214)

# சங்கிலி அறுப்பு: கைதானவர் விடுவிப்பு

சாவகச்சேரி, பெப்.8

சங்கிலி பறிப்புக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், சரியான சாட்சியம் இல்லாததன் காரணமாக வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சி பகுதியில் வீதியில் சென்ற பெண் அணிந்திருந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் அறுத்துக்கொண்டு தப்பியோடினார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த 2017 ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ளது.

சங்கிலியைப் பறிகொடுத்த பெண் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து சந்தேகத்தின் பேரில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார். அவர், நீதிமன்ற அடையாள அணிவகுப்பின்போது பாதிக்கப்பட்ட பெண்ணால் அடையாளம் காணப்பட்டார்.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையில் திருட்டை நிரூபிக்கக்கூடிய வகையில் பாதிக்கப்பட்ட பெண் சாட்சியமளிக்காததால் சந்தேக நபர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். (ப-9)

# மாவட்டத்துக்கு ஒரு பொது மருத்துவமனை மாத்திரமே!

## யாழ். மாவட்ட மருத்துவமனைகளை தரம் உயர்த்துவதில் சிக்கல் நிலை

யாழ்ப்பாணம், பெப். 8

**மாவட்டத்துக்கு ஒரு பொது மருத்துவமனை மாத்திரமே இருக்க முடியும் என்ற தேசியக் கொள்கையால் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஆதார மருத்துவமனைகளை பொது மருத்துவமனைகளாக தரம் உயர்த்த முடியாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போதே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைகளை பொது மருத்துவமனைகளாக தரம் உயர்த்தும் கோரிக்கைகள் அந்தந்தப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முன்வைக்க ப்பட்டிருந்தன. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போது பதிலளித்த கேதீஸ்வரன், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையை பொது மருத்துவமனையாக தரம் உயர்த்த கொழும்பு அரசின் சுகாதார அமைச்சுக்கு ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடியபோது, மாவட்டத்துக்கு ஒரு பொது மருத்துவமனை மாத்திரமே இருக்க முடியும் என்று குறிப்பிடுகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பொது மருத்துவமனையாக இருப்பதால் வேறு மருத்துவமனைகளை பொது மருத்துவமனைகளாக தரம் உயர்த்த முடியாது என்று கூறியுள்ளனர், -என்றார்.

இதன்போது இணைத் தலைவர்களுள் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், ஒன்றுக்கு மேற்பட்ட பொது மருத்துவமனைகள் ஏனைய மாவட்டங்களில் உள்ளனவே என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த கேதீஸ்வரன், இதனை நாம் சுட்டிக்காட்டினோம். கடந்த காலங்களில் இவ்வாறு தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் அவ்வாறு செய்ய முடியாது என்று கொழும்பு சுகாதார அமைச்சு அதிகாரிகள் பதிலளித்தனர் என்று குறிப்பிட்டார். (ஒ-5)

# குருதி வங்கி அமைப்பதற்கான கோரிக்கைக்கு பதில் இல்லை!

யாழ்ப்பாணம், பெப். 8

சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை மருத்துவமனைகளில் குருதி வங்கிகள் அமைப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் தேசிய குருதி வங்கியிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது. ஊர்காவற்றுறை மற்றும் சாவகச்சேரி மருத்துவமனைகளில் குருதி வங்கிகள் அமைப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்ற விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரன், இந்தக் கோரிக்கையை பரிந்துரைத்து நாம் தேசிய குருதி வங்கிக்கு அனுப்பியுள்ளோம். அங்கிருந்து பதில் இன்னமும் வரவில்லை -என்றார். (ஒ-5)

# மருத்துவமனை விடுதிகள் அமைக்க நிதி ஒதுக்கீடு!

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு மருத்துவமனைகளின் விடுதிகள், களஞ்சியங்கள், கட்டடங்கள் அமைப்பதற்குரிய நிதி இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 2ஆம் திகதி மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் முன்வைக்கப்பட்டன.

பருத்தித்துறை மருத்துவமனைக்கு மருத்துவ சிகிச்சை நிலையம் அமைக்கப்படவேண்டும் எனவும், தெல்லிப்பழை மருத்துவமனைக்கு மருந்துக் களஞ்சியம் அமைக்கப்படவேண்டும் என்றும், ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு சத்திரசிகிச்சைக் கூடம் மற்றும் விடுதிகள் அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இவற்றுக்குரிய நிதிகள் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

இதேவேளை பருத்தித்துறை, தெல்லிப்பழை மற்றும் சாவகச்சேரி மருத்துவமனைகளில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர், தெல்லிப்பழையிலிருந்த தொகுதி பழுதடைந்துள்ளது. அதனைத் திருத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார். (ஒ-5)

## மழைக்காலத்தில் வடிந்தோடாத வெள்ளம்

# வலி. தென்மேற்கு விவசாயிகளின் பிரச்சினையை ஆராய தனிக்குழு

யாழ்ப்பாணம், பெப். 8

வலிகாமம் தென்மேற்கு விவசாய நிலங்களில் மழைக் காலங்களில் வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கி நின்று பயிர்கள் அழிவது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக தனியான ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

உரிய வடிகால்கள் இன்மையாலும், இருக்கும் வடிகால்களைச் சீரமைக்காமையாலும் மழைக்காலங்களில் பெருமளவு பயிர்கள் அழிந்துவிடுகின்றன. குறிப்பாக ஏனைய பகுதிகளில் இருந்து வெட்டி விடப்படும் வெள்ளம் வேறுசில இடங்களில் வழிந்தோட முடியாமல் தேங்கிநின்று அழிவுகளை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பில் பலமுறை நாம் முறைப்பாடு வழங்கியுள்ளோம். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே அனைத்து விவசாய சங்கங்களையும் அழைத்து கலந்துரையாடி தீர்க்கமான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என்று விவசாய சங்கத்தின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து குறித்த விடயம் தொடர்பில் ஆராய விவசாய சங்கத்தினருடன் தனியான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-319)

# வலயப் பணிப்பாளர்களே தனிப்பட்ட ரீதியில் பொறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

அபிவிருத்திகளுக்காக சரியான பாடசாலைகளைத் தெரிவுசெய்ய வேண்டும். இதற்கு தனிப்பட்ட ரீதியில் அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களே பொறுப்பு. இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 2ஆம் திகதி மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இந்தக் கருத்தை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் பாடசாலை ஒன்றின் நிகழ்வுக்குச் சென்றிருந்தேன். அந்தப் பாடசாலையில் 150 மாணவர்கள் கற்கின்றனர். 3 மாடிக் கட்டடங்கள் 3 இருக்கின்றன. 23 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். இவ்வாறுதான் கடந்த காலங்களில் வளங்களைப் பகிர்ந்துள்ளார்கள். ஆனால் கிராமப்புறங்களில் கொட்டில்களில் கற்றலை முன்னெடுக்கும் பாடசாலைகளும் இருக்கின்றன.

அபிவிருத்திக்காக பாடசாலைகளைத் தெரிவுசெய்யும்போது சரியான பாடசாலைகளைத் தெரிவுசெய்ய வேண்டும். அதற்குரிய பொறுப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குரியது. தனிப்பட்ட ரீதியில் அவர்களே அதற்குப் பொறுப்பாளிகள், என்றார். (ஒ-5)

# அனலைதீவுக்கு அம்புலன்ஸ் படகு அனுமதி இன்னும் வரவில்லை

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்ப்பாண மாவட்டத்தின் அனலைதீவுக்கு தனியான அம்புலன்ஸ் படகுக் கொள்வனவுக்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதும் அதற்குரிய அனுமதி இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகியனவற்றுக்கு அம்புலன்ஸ் படகுகள் தேவை என்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த கேதீஸ்வரன், அனலைதீவுக்கு அம்புலன்ஸ் படகு கொள்வனவு செய்வதற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கியுள்ளோம். அனலைதீவுக்கு பெற்றுக்கொள்ளப்படும் அம்புலன்ஸ் படகு எழுவைதீவு பிரதேசத்தையும் உள்வாங்கிக் கொண்டே சேவையை நடத்தும். நிதி விடுவிப்புக்குரிய அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை.

இதேவேளை நயினாதீவில் உள்ள அம்புலன்ஸ் படகு பழுதடைந்துள்ளது. அது மாவட்டச் செயலரின் உதவியுடன் திருத்தப்படுகின்றது, என்றார். (ஒ-5)

# உத்தேச அரசமைப்பில் தேர்தல் முறைமை மாறும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.8**

**உத்தேச அரசமைப்பில் தேர்தல் முறைமை முழுமையாக மாற்றியமைக்கப்படும். இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவார்கள். புதிய அரசமைப்புத் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் யோசனைகளை நாளை மறுதினம் புதன்கிழமை நிபுணர் குழுவிடம் முன்வைக்க எதிர்பார்த்துள்ளோம்.**

இவ்வாறு பொதுஜன பெரமுனவின் தவிசாளரும், கல்வி அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது நடைமுறையிலுள்ள இரண்டாம் குடியரசு அரசமைப்பு 42 வருட காலம் பழைமையானது. தற்போதைய அரசியல் மற்றும் சமூக மாற்றத்துக்கு அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பொருத்தமற்றவையாக உள்ளன. ஆகவே காலத் தேவைக்கு ஏற்ப பொருந்தும் அரசமைப்பை உருவாக்குவதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பை உருவாக்க இதுவரையில் ஆட்சியில் இருந்த அரசுகள் முயற்சித்தபோதும் அதனைச் செயற்படுத்த முடியவில்லை. எந்தக் கட்சி தலைமையிலான அரசும் இதுவரையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும், பொதுத்தேர்தல் காலத்திலும் அரசமைப்பு தொடர்பில் இரண்டு பிரதான வாக்குறுதிகளை நாட்டு மக்களுக்கு வழங்கியது. அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நீக்கல், புதிய அரசமைப்பு உருவாக்கம் ஆகியவை அவற்றில் பிரதானமானவையாகும். உத்தேச புதிய அரசமைப்பு தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் யோசனைகளை இரண்டு மாத காலத்துக்குள் நிபுணர்கள் குழுவிடம் முன்வைக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை இவ்வருடத்தின் டிசெம்பர் மாதத்துக்குள் நிறைவேற்றுவோம் - என்றார். (ப)

## சைபர் தாக்குதலுக்கு இலக்காகிய இலங்கை இணையங்கள்

கொழும்பு, பெப். 8

இலங்கையில் .lk என முடிவடையும் முகவரியை உடைய இணையத்தளங்கள் சைபர் தாக்குதலுக்குள்ளாகி செயலிழந்துள்ளன.

குறித்த இணையத்தளங்களை மீட்டெடுப்பதற்கு தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு இலங்கையின் கணினி அவசரநிலை பதிலளிப்பு மற்றும் இணைய முகவரி பதிவு நிறுவனம் ஆகிய வற்றுடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான முறைப்பாடுகளை 0114216061 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்க முடியும் என தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது. (ய)



## இளைஞர்களுக்கான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், பெப்.8

"ஒன்று கூடுவோம்" இலங்கை அமைப்பின் ஏற்பாட்டில் தலைமைத்துவம் தொடர்பான இளைஞர் பயிற்சிப் பட்டறையொன்று இடம்பெற்றுள்ளது. நல்லிணக்க அமைப்பு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்துடன் இணைந்து முன்னெடுத்த இந்தப் பட்டறையில் மனித உரிமைகள், தலைமைத்துவம் தொடர்பான புத்தகங்களும் வழங்கப்பட்டன. நிகழ்வின் வளவாளராக ஒன்று கூடுவோம் இலங்கை அமைப்பின் யாழ் மாவட்ட இணைப்பாளர் நக்கீரன் கலந்துகொண்டார். (வ-159)

## யாழ்.ப.நோ. கூ. சங்கத்துக்கு புதிய இயக்குநர் சபை தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபையின் தலைவராக ச.லோகசிவமும் உப தலைவராக என்.எஸ்.சத்தியதாசனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இயக்குநர்களாக செ.தேவராசா, ச.புஸ்பராஜா, பா.வின்சன்ற், க.மதீஸ்வரன், பு.மோகன்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வீரசிங்கம் கட்ட வளாகத்தில் நடைபெற்றது. முன்னாள் தலைவர் சா.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 65க்கும் மேற்பட்ட பொதுச்சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (த-17)



## மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

வவுனியா,பெப்.8

வவுனியா -கனகராஜன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குளவிசுட்டான் வயல் பகுதியில் மின்சாரம் தாக்கி யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

குறித்த பகுதியில் யானையின் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்த கிராம மக்கள் கனகராயன்குளம் பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் உடலத்தை பார்வையிட்டதுடன், வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கும் தகவல் வழங்கியிருந்தனர். சந்தேகத்தின் பேரில் அப் பகுதியில் விவசாயம் செய்யும் விவசாயி ஒருவர் விசாரணைக்காக வனஜீவராசிகள் திணைக்களத்தால் அழைத்து செல்லப்பட்டார்.

குறித்த யானையின் சடலம் துர்நாற்றம் வீசுவதால் பல நாள்களுக்கு முன்னரே இறந்திருக்கலாம் என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-110)

## கல்வி அமைச்சர் – யாழ்.ஆயர் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப்.8

கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், யாழ். ஆயர் கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை யாழ். ஆயர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினார் என ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி சந்திப்பில், இன்றைய கல்வி நிலை, இனப்பிரச்சினை மற்றும் அதிகாரப் பரவலாக்கம் என்பன பற்றிக் கலந்துரையாடப்பட்டன. (ற)

## சாவகச்சேரி மருத்துவமனையில் 2020 இல் சிகிச்சை பெற்றோர் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேர்

சாவகச்சேரி, பெப்.8

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த ஆண்டு ஒரு லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர் என மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வெளிநோயாளர் பிரிவில் 4 ஆயிரத்து 320 பேரும் கிளினிக்குகளில் 62 ஆயிரத்து 167 பேரும் விடுதிகளில் தங்கி 12 ஆயிரத்து 487 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். இதேவேளை, வீதி விபத்துக்களில் சிக்கி 414 பேரும், மரங்கள், மாடிகள், வீடுகளுக்குள் சறுக்கி விழுந்து 798 பேரும், தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்து 447 பேரும் உயிர் மாய்க்க முயற்சித்து 77 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும் மிருகங்களால் கடியுண்டு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசியை 182 பேரும் பெற்றுள்ளனர். (வ-9)

## தொழில் வாய்ப்புக்கான பயிற்சிச் செயற்றிட்டம்!

மன்னார், பெப் 8

மன்னார் றொட்டரிக் கழகத்தின் அனுசரணையில் தொழில் வாய்ப்புக்கான வழிகாட்டல் மற்றும் பயிற்சி செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தேசியத் தொழில் வங்கியால் மன்னார் ஆகாஷ் ஹொட்டலில் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இந்தப் பயிற்சி செயற்றிட்டம் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சி செயற்றிட்டத்தில் சுமார் 60 இளைஞர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (ற-213)





வயாவிளான் மத்திய கல்லூரியின் பவளவிழாவை முன்னிட்டு, நடன பாடத்துக்கான திறன் வகுப்பறை வடக்கு மாகாண அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளரால் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. இதற்கான நிதியுதவியை ஈவினை, புன்னாலைக் கட்டுவன் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 'மாஸ்' நண்பர்கள் குழு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## இன்றைய நாள்

**மேடம்:** இரண்டு நாளாக இருந்து வந்த கவலைகள் ஓடி மறையும். பெரிய முதலீடுகளை இரண்டு நாள் ஒத்தி வைக்கலாம். மேலதிகாரியை சகாக்களிடம் குற்றம் சொல்ல வேண்டாம்.

**இடபம்:** பேச்சிலும், செயலிலும் கவனமாக இருப்பீர்கள். கவலை தீரும். அந்தஸ்தும், மதிப்பும் உயரும். வாழ்க்கை வசதிகள் பெருகும். உடல் நலம் சீராகும்.

**மிதுனம்:** முக வசீகரம் கூடும். நல்ல செய்திகள் வந்து சேரும். வேலைப் பளு குறைந்து வருமானம் உயரும் வேளை இது. குடும்பத்தினரின் செயல்பாடுகள் மன நிறைவு அளிக்கும்.

**கடகம்:** சொத்துக்கள் மூலம் லாபம் வரும். நன்மைகள் வந்து சேரும். அதிகமாக வேலை செய்ய வேண்டி வந்தாலும் உற்சாகம் இருக்கும். பணியாளர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** உடன்பிறந்தோரும், நீங்களும் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பீர்கள். ஆளுமைத்தன்மையும் முரட்டுத்தனமும் அதிகரிக்காமல் கவனம் தேவை.

**கன்னி:** பயம் வேண்டாம். சிலருக்கு அலைச்சல் அதிகரிக்கும். எதையும் கூர்ந்து கவனிக்கிறேன் என்று சங்கடம் தராதீர்கள். பணியிடத்தில் உற்சாகம் பெருகும். பலவித வருமானம் வரும்.

**துலாம்:** உங்கள் துறையைவிட்டு பிற துறைகளிலும் கவனம் செல்லும். புதிய விடயம் ஒன்றை கற்பதற்கு ஆர்வம் அதிகரிக்கும். உங்கள் திறமைகளை நிர்வாகத்துக்கு எடுத்துச் சொல்வீர்கள்.

**விருச்சிகம்:** மேலதிகாரியின் கவனத்தில் விழுந்திருப்பதால் நன்மை வரும். தன்னம்பிக்கை குறையாமல் கவனமாக இருங்கள். உங்கள் சிறப்பை மற்றவர் கவனித்து எடுத்துரைப்பார்கள்.

**தனுசு:** பெருமைமிகு நன்மைகள் வரும். குடும்ப நபர்கள் அதிகரிப்பர். திடீர் லாபங்கள் உண்டு. இழந்த பொருள் கிடைத்து மகிழ்விக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்ததை விட நன்மை கூடும்.

**மகரம்:** உழைப்பு மிகவும் அதிகரிக்கும். பரபரப்பான நாள். பணியாளர்களுக்கு இன்று பரபரப்பான நாள். நன்மை கூடும். மற்றவர்களை எரிச்சலூட்டும்படி நடந்துகொள்ள வேண்டாம்.

**கும்பம்:** தொல்லை தரும் நபர்களை அழகாக சமாளிப்பீர்கள். பெரிய திட்டம் ஒன்றைச் செம்மையாக நிறைவேற்றுவீர்கள். குழந்தைகளிடம் தேவையற்ற கண்டிப்புக் காட்டாதீர்கள்.

**மீனம்:** குழந்தைகள் உங்களின் சிறப்பை வெளிப்படுத்துவார்கள். மனம் திறந்து பேசினால் ஆறுதலும், தீர்வும் கிடைக்கும். கடந்த சில நாள்கள் இருந்து வந்த மன வருத்தங்கள் தீரும்.

*இலங்கைக்கு சார்பாக*

# முஸ்லிம் நாடுகளின் ஆதரவைத் திரட்ட பாகிஸ்தான் பிரயத்தனம்

கொழும்பு, பெப்.8

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்குச் சார்பாக முஸ்லிம் நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது என இலங்கை வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாஸா விவகாரத்தில் இலங்கை கடைப் பிடித்த அணுகுமுறையால் ஜெனிவாத் தொடரில் கடந்த காலங்களில் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்ட பங்களாதேஷ், இந்தோனேசியா, பஹ்ரைன் உள்ளிட்ட முஸ்லிம் நாடுகள் தற்போது கடும் அதிருப்தியில் இருக்கின்றன. எனவே, பெப்ரவரி 23 ஆம் திகதி இலங்கை தொடர்பில் முன்வைக்கப்படவுள்ள புதிய பிரேரணை, வாக்கெடுப்புக்கு விடப்படும்போது அதனை மேற்படி நாடுகள் ஆதரிக்கக் கூடும் அல்லது வாக்கெடுப்பில் இருந்து விலகியிருக்கக்கூடும் என இராஜதந்திர மட்டத்தில் தகவல்கள் வெளியாகியிருந்தன. இவ்வாறானதொரு பின்புலத்தில், மேற்படி நாடுகளின் ஆதரவை கொழும்புக்கு மீண்டும் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் பாகிஸ்தான் இறங்கியுள்ளது எனக் கூறப்படுகின்றது. அதேவேளை, எதிர்வரும் 22 ஆம் திகதி இலங்கை வரவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இதன்போதும் ஜெனிவா விவகாரம் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது. (வ-44)

# தொற்றுப் பரவல் வேகம் எடுக்கும்



கொழும்பு, பெப்.8

மக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் இறப்பு மற்றும் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதத்துக்கு முன்புபோன்று மக்கள் தங்கள் பயணங்களைக் கட்டுப்படுத்தவில்லை. ஆகையால், அடுத்த இரண்டு வாரங்களில் வைரஸ் பரவலில் பெரும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார். (வ-இ)

# சிறப்பு வழிபாடு

கொக்குவில், பெப்.8

உலக மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலய முதன்மை குருக்கள் சிவஸ்ரீ சொ. இ .விக்னேஸ்வரக்குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயணமும் நடைபெறவுள்ளன.

நாடளாவிய ரீதியில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆலயங்கள் தோறும் சிறப்பு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஊழியர் சேமலாப நிதிய வயதெல்லையில் மாற்றம்

கொழும்பு, பெப்.8

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புச்செய்யக்கூடிய குறைந்தபட்ச வயதெல்லையை மாற்றியமைப்பதற்கான உத்தரவு விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இதன்படி, வயதெல்லையை 14 முதல் 16 வரை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு தற்போது விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற தொழில் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# 11ஆயிரம் கைதிகளை விடுவித்தது அரசாங்கம்

கொழும்பு, பெப்.8

சிறு குற்றங்கள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 11 ஆயிரத்துக்கும் அதிகமான கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார். கண்டி பகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எதிர்வரும் வெசாக் தினத்தை முன்னிட்டு மேலும் சில கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)



# 'ஜீவ ஊற்று அன்பின் கரம்' 18ஆவது வீடு கையளிப்பு

கொழும்பு, பெப். 8

'ஜீவ ஊற்று அன்பின் கரம்' அமைப்பு அமைத்த பதினெட்டாவது வீடு பயனாளியிடம் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி அக்கராயன் பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கே வீடு கட்டிக்கொடுக்கப்பட்டது. இந்த அமைப்பின் ஊடாக லண்டன் லைம் மினிமார்ட் கடை உரிமையாளர் வீடு கட்டுவதற்கான நிதியை வழங்கியிருந்தார்.

வீடு கையளிப்பு நிகழ்வில் ஜீவ ஊற்று அன்பின் கரம் செயலாளர் பிரவீண், பொருளாளர் ஜெஸ்மன், வவுனியா மாவட்ட இணைப்பாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர் சுந்தர் ஆகியோருடன் மன்னார் மாவட்ட பணியாளர் தமிழ்செல்வன் ஆகியோர் பங்கேற்றனர். (த-222)

நடேசு தயாளன்
அதிபர்
கோண்டாவில் இந்துக் கல்லூரி.

# வினைத்திறன்மிக்க கற்றலுக்கு...



விளைவை அடிப்படையாகக் கொண்ட கற்றலின் தேவை அதிகரித்துள்ள இன்றைய நிலையில், பாடசாலையால் சிறப்பான விளைவுகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் பாடசாலையில் உயிர்த்துடிப்பான கற்றல், கற்பித்தல் செயலொழுங்கில் மாற்றங்கள் இடம்பெற வேண்டியது அவசியமானதாகும். எந்தவிதமான சமூகப் பெறுமானங்களும், உள்ளீடுகளுமற்ற கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதைத் தவிர்த்து, மாறும் சமூகப் பொருளாதார களநிலைமைகளில் எதிர்கொள்கின்ற சவால்களை வெற்றிகொள்ளக் கூடிய பாடசாலைக் கல்வியை மாணவர்களுக்கு வழங்குதலே இன்று எதிர்பார்க்கப்படும் கல்விச் செயன்முறையாகவுள்ளது. இத்தகைய முறையில் சமூகத்துக்காகப் பங்காற்றும் பாடசாலைகள் வினைத்திறன் உடையவையாகும்.



பாடசாலையின் வினைத்திறன் என்பது பரந்துபட்ட எண்ணக்கருவாகும். இதுதொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற வண்ணமுள்ளன. பாடசாலையின் வினைத்திறன் தொடர்பிலான பிரதான குறிகாட்டியாக மாணவர் அடைவு விளங்குகின்றது. எனினும் இன்றைய காலத்தில் மாணவர்களது அடைவு மட்டத்துடன் மட்டுமல்லாது பல்வேறுபட்ட விடயங்களையும் உள்ளடக்கியதாக இது மாற்றமடைந்துள்ளது.

அந்தவகையில், பாடசாலையின் வினைத்திறனில் ஆசிரியர்களது கல்வித்தரம், நடத்தைப்பாங்கு, பாடசாலைச் செயன்முறையில் மனிதத்துவப்பாங்கு, நிதி மற்றும் வளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும், கற்பித்தல் முறையியல்கள், வகுப்பறைக் கட்டமைப்பு என்பவை பிரதான செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகக் கொள்ளப்படுகின்றன.

வினைத்திறனான பாடசாலைச் செயன்முறைக்கு சிறப்பார்ந்த திட்டமிடல்கள், பாடசாலைசார் கொள்கையாக்கல்கள் மற்றும் பிரயோகநிலைகள் செல்வாக்குச் செலுத்துவனவாக உள்ளன. பாடசாலை என்பது சமூக நிறுவனமாகக் கொள்ளப்படும் நிலையில் சமூக உறுப்பினர்களின் பங்குகொள்ளலும், அவர்களிடையேயான இடைவினையுறவும் முக்கியத்துவமுடையவை.

இதுதவிரப் பாடசாலையின் உள்ளீடுகளான ஆசிரியரது இயலுமைகள், மாணவர்களது ஆயத்தநிலை, பெற்றோர்களது ஆதரவு, நிறுவனக் கொள்கையாக்கல்கள், பௌதிக வசதிகள் என்பவற்றோடு பாடசாலை நிலைமாற்றுச் செயன்முறையான அறிவுறுத்தற்தரம், தரமான தலைமைத்துவச் செயன்முறை, பாடவிதானத் தரநிலை, பாடசாலையும் வகுப்பறை நிலமைகளும், கற்கும் நேரம், மாணவர்களது ஆரோக்கிய நிலை, ஊக்கல் செயன்முறைகள், தூரநோக்கு மற்றும் மாணவர்களது கற்றலும் கற்றல் அடைவுகளும், தொழில் திருப்தி வரவின்மை மட்டம் பாடசாலை இடைவிலகல் நிலை, செயலாற்றுகைத் தரம் என்பவையும் இதனோடு தொடர்புடையவையாகும்.

### சிறப்பாக கற்றல், கற்பித்தலுக்கு

பாடசாலையில் சிறப்பான கற்றல் நிலை தோற்றுவிக்கப்பட வேண்டுமானால், வகுப்பறை நிலைமை களுக்கப்பால் பாடசாலையின் அனைத்துக் கட்டமைப்புக்களும் பாடசாலையின் வெளிச் சூழலும் பொருத்தமான ஒழுங்கு முறைக்குள் கொண்டு வரப்படுதல் மிகவும் அவசியமானதாகும்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் சிறப்பான வகுப்பறை முகாமைத்துவத் திறன் பெற்றவர்களாக விளங்குதல் அவசியமானதாகும். ஆசிரியர்களிடையே தொழில்சார் கண்ணிய நிலை, நிறுவனச் செயன்முறையில் வெற்றிகரமான செயற்பாட்டுக்காக நேர்மனப்பாங்குடன் செயற்படல், கற்போரைச் சுய ஊக்கலுக்கு உட்படுத்துவதோடு அவர்களது உளப்பாங்கை மேன்மைப்படுத்துதல் என்பவை அவசியமானவை. ஆசிரியர்களானவர்கள் பாடசாலைச் செயன்முறையை குழப்பநிலைக்குட்படுத்துதல், எதிர்மறையான குழு உணர்வைத் தோற்றுவித்தல், பாரம்பரியங்களைத் தொடர்ந்து பேணுவதில் நாட்டமுடையவராகவும் புதுமைகாண விளையாதவர்களாகவும் தனது தொழில்சார் கடமைக் கூறுகளை மேற்கொள்ளாது இருப்பது என்பவை வினைத்திறனான பாடசாலைச் செயன்முறையைக் கட்டியெழுப்புவதற்கு தடையாகவே அமையும்.

விளைத்திறன்மிக்க பாடசாலை அதிபரானவர், பாடசாலைச் சமூகத்துடன் நல்லுறவை ஏற்படுத்தும் செயலொழுங்குக்குத் திட்டமிடுபவராகவும், வெளிப்படைத் தன்மையுடையவராகவும், முரண்பாட்டு முகாமைத்துவத்தை வெற்றிகரமாகக் கையாளும் திறனுடையவராகவும் விளங்குதல் வேண்டும். பாடசாலைத் தலைவர் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும் நபர்களை இனங்காணும் திறனைப் பெற்றவராக விளங்குதல் அவசியமானது. சிறந்த திட்டமிடலாளர், வழிப்படுத்துநர், சமூகத் தொடர்பாளர் என்ற நிலையில் செயற்படுதல் சிறப்பானது. பாடசாலை அதிபரானவர் செயலுபாயத் தலைவராகவும், செயலுபாயத் தலைமைத்துவத் திறன் உடையவராகவும் விளங்குதல் வேண்டும்.

சிறப்பான தொடர்பாடல் திறனைக் கட்டியெழுப்புதல் தனியாள் தேவைகளை நிறைவு செய்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்தத் தக்கதான பௌதீகச் சூழலைக் கட்டியெழுப்புதல், ஜனநாயகக் கலாசாரச் சூழலை பாடசாலையில் கட்டியெழுப்புதல், பல்வகைமை நிலையை அங்கீகரித்தல், பொருத்தமான மொழிப் பிரயோகத்தைக் கையாளல், பாடசாலைக்குப் பொருத்தமான அபிவிருத்தி அனுகுமுறைகளைக் கையாளல் என்பவை அவரிடம் எதிர்பார்க்கப்படும் அவசியமான திறன்களாகவுள்ளன.

### பாடசாலை வினைத்திறனில் ஆசிரியருடைய பங்களிப்பு

பாடசாலைக் கல்வியின் ஒவ்வொரு செயன்முறையும் மாணவரிடையே ஆளுமைத் திறனைக் கட்டியெழுப்புவதாக அமைந்து காணப்படவேண்டும். ஒவ்வொரு மாணவனும் உன்னதமான வெற்றியை அடைந்து கொள்வதற்கு ஆசிரியரது பங்குபற்றுதல் மிகவும் அவசியமானதாகும். இதன் காரணமாக ஒவ்வொரு மாணவனதும் ஆளுமை விருத்திச் செயன்முறையில் ஆசிரியரது பங்களிப்பு உன்னதமாக இருக்க வேண்டும். இதற்காக குழுக் கலந்துரையாடல் விவாதத்துக்கான கள நிலமைகளை ஆசிரியர்கள் வகுப்பறையில் ஏற்படுத்துவது அவசியமானதாகும் என்பதோடு பாடசாலைத் தலைவர்களும் அதற்கான செயற்பாடுகளில் பங்கு கொள்ளுதலும் அவசியமானது. இச்சந்தர்ப்பத்தில் நுண்ணறிவுத் திறன் கூடிய மாணவனது பங்களிப்பு அதிகமாக இருப்பதோடு ஏனைய மாணவர்களது பங்களிப்பு குறைவான தாகவும் அமைந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக ஆசிரியரது தலையீடு மிகவும் இன்றியமையாததாக வேண்டப்படுகின்றது. இதன் மூலம் ஏனைய மாணவர்களையும் பங்காளராக மாற்றமுடியும். மாணவர்களிடத்தில் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் பிள்ளையின் ஆளுமைத் திறன் விருத்தியில் ஆசிரியரது பங்களிப்பு முக்கியமான தாகும். பிள்ளையினுடைய உள்ளார்ந்த திறன்களை இனங்கண்டு விருத்தி செய்வதனூடாக அவனிடத்தில் சிறப்பான ஆளுமைத் திறனைக் கட்டியெழுப்புதல் வேண்டும். கல்வியின் இலக்கு, அனைத்துவிதமான உள்ளார்ந்த திறன்களது விருத்தியின் உள்ளடக்கமாகும். ஆளுமை விருத்தியில் அறிக்கைசார் எண்ணக்கருவினது பிரயோகமும் அவசியமானதாகும். ஆசிரியரானவர், வெறுமனே தகவல்களை வழங்கும் முகாமையாளராக அல்லாது, அதற்கப்பாலும் நகரவேண்டியவராகவுள்ளார். இங்கு முழுமையான விழுமிய இயல்புகளின் உள்ளடக்கங்களையும் மாணவர்களிடம் பரிமாறி வளர்க்க வேண்டியவராய் உள்ளார். ஆசிரியரானவர் கல்விச் செயன்முறைக்கும் மாணவர்க்கும் இடையில் ஒரு தொடர்பாளராக விளங்குதல் வேண்டும்.

சரியானதை தவறானதிலிருந்து பிரித்தறிய முடியாத நிலையிலுள்ள பிள்ளைகளிடம் சிறப்பான சிந்தனைத் திறனை வளர்ப்பதற்கு பகுப்பாய்வுச் சிந்தனை தர்க்கரீதியான சிந்தனைத் திறன்களை வளர்த்தெடுக்க வேண்டியுள்ளதை ஆசிரியர்கள் உணர்ந்து கொள்



ளல் அவசியமாகும்.

இன்றைய வளர்ந்தோரில் பெரும்பாலானோர், சரியானதைத் தவறானதிலிருந்து பிரித்தறிய முடியாதவராகவும், நல்ல தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதவராகவும், உள்ள நிலைமையானது தொழிலுலகில், வாழ்க்கை முறையில் அவர்களது செயற்பாடுகளில் முரண்பாடான நிலையைத் தோற்றுவித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய நிலையினை எதிர்காலச் சந்ததியினரும் அடையாதிருக்க வேண்டும் என்பதில் கூடிய கரிசனை செலுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

தற்காலத்தில் கற்றோர் எனக் கூறப்படுபவர்களில் பெரும்பாலானோர், குழுவாகச் சேர்ந்து இயங்கும் மனப்பாங்கு அற்றவர்களாகவும், நிறுவன வளர்ச்சி நோக்கிய நேர்மனப்பாங்கு உணர்வு அற்றவர்களாகவும் காணப்படுதலானது நிறுவன வளர்ச்சியில் ப[illegible] நிலையைத் தோற்றுவித்துள்ளமை அவதானத்து[illegible]ரியது. எதிர்காலச் சந்ததியினரிடம் இத்தகைய குறைபாடுகள் இல்லாது ஒழிக்கப்படுவதில் பாடசாலையின் பங்களிப்பு எத்தகையது என்பது தொடர்பில் ஆசி[illegible]ரது தெளிவு மிகவும் இன்றியமையாததாகும்.

பாடசாலையொன்றின் பிரதான நோக்கம் சமூகத்துக்குப் பொருத்தமான நற்பிரஜையை உருவாக்குவ[illegible]கான பொதுக் கல்வியை வழங்குவதாகும். ஆ[illegible] ஒன்றிணைந்த ஆளுமைத் திறன் கொண்ட[illegible] ஒருவரை உருவாக்குவதில் கல்வி வழங்கும் செ[illegible]முறையில் பங்கு கொண்டுள்ள அனைவரும் இணை[illegible] பணியாற்றுதல் அவசியமானதாகும். இதுவே[illegible]றைய காலத்தின் தேவையுமாகவுள்ளது.

SHREE INFRASTRUCTURES

# Vacancy

Shree Infrastructure (pvt) ltd is a leading construction and infrastructure development company Operating globally. Our new venture in srilanka looking for suitable candidates for the following Vacancy.

Marketing Manager

Basic Requirements
- A Bachelors degree in marketing field along with three years work experience.
- Excellent communication skills – written & oral (English essential).
- Age below 35 years.

We are expecting energetic individual to join our team. Attractive remuneration package.
Await for the suitable candidate.
Email your CV:slshree7@gmail.com before 10th February 2021.

**Human Resource Department**
**Shree Infrastructure (pvt) ltd**
**No: 218 Stanly road,Jaffna.**
**021 430 0505**

# பால்மா இறக்குமதியின்மை; 50 பில்லியன் ரூபா சேமிப்பு

கொழும்பு, பெப்.8

**வரலாற்றில் முதற் தடவையாக 2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து பால்மா இறக்குமதி செய்யா மையால் ரூ. 50 பில்லியனுக்கும் அதிகமான தொகையைச் சேமிக்க முடிந்துள்ளது என சமீபத்திய சுங்கத் தரவுகளில் தெரியவந்துள்ளது. கொரோனாப் பரவலால் கடந்த ஆண்டில், குறைந்த அளவிலான பால்மா மட்டுமே நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.**

கொரோனா, பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியிருந்தாலும் எதிர்பார்த்ததை விட விரைவாகத் தேசிய பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடிந்துள்ளது என உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் 2022 இல் இலங்கையில் எந்த பால்மா இறக்குமதியும் இருக்காது என்றும் அதற்குள் பால்மா துறையில் உள்ள முறையை மாற்றி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (வ-இ)

77 ஆவது அகவையை எய்தும் மொழி ஞாயிறு




தென்புலோலியூர்

## உயர்திரு. க.சி.சிவசுப்பிரமணியம்

(பிரபல ஆங்கில விரிவுரையாளர்)

**அவர்களின் 77 ஆவது பிறந்ததினம் இன்றாகும்**

"தோன்றிப் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை" நன்று"

என்ற வள்ளுவன் விள்ளிய வான்மறைக்கு ஏற்ப சிறப்போடும். புகழோடும் பேராசான் வாழ்ந்து வருகிறார்.

பேராசானிடம் ஆங்கிலம் கற்ற பல்துறைகளை சேர்ந்த மாணவர்கள் உலகின் அனைத்து இடங்களிலும் ஆங்கிலத்தில் சிறந்த அறிவுடன் வாழ்ந்து வருகின்றனர். எமது ஆசான் இளவயதிலேயே ஆங்கில மொழியில் மிகவும் தேர்ச்சிபெற்று ஆங்கிலத்தை பயிற்றுவிக்கவும் தொடங்கினார். அது மட்டுமல்லாது இவர் தமிழ் பண்டிதராகவும் இலத்தீன், பிரெஞ், ஜேர்மன் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவராகவும் இருந்தார். எம் ஆசானின் இலக்கண நடை, சொல்வளம், ஆங்கிலம் கற்பிக்கும் நுட்பம் என்பவை அவருக்கே தனித்துவமானவை. பல மாணவர்கள் கற்ற இவரிடத்தில் நானும் ஒரு மாணவனாக கற்றுக்கொண்டிருப்பது எனது முற்பிறப்பில் நான் செய்த புண்ணியமாகவே கருதுகின்றேன். எங்கள் பேராசான் உடல் ஆரோக்கியத்துடனும், உற்சாகத்துடனும் தனது மொழி அறிவினை தமிழ் சமூகத்திற்கு ஊட்ட எல்லாம் வல்ல திருமாளின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

**அன்பு மாணவன்**
**பொது சுகாதார பரிசோதகர்**
**அ.ஜெயகிருஷ்ணா.**

**இன்று (08.02.2021) திங்கட்கிழமை 77 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும்** தென்புலோலியூர் கந்தமுருகேசனார் வீதியை சேர்ந்த கல்விமான் **திருவாளர் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்** அவர்களை மாண்புடன் வாழிய வாழிய என்று வாழ்த்துவமே!

அன்பின் உறைவிடமாய், அறிவில் பெருங்கடலாய் பாசத்தின் திருவுருவாய், பார்போற்றும் ஆசானாய் அந்தப் பெருந்தகை இப் பூமியில் உதித்திட்ட இந்தப் பொன்னான திருநாளில் அவர் நிறைந்த ஆயுள் ஆரோக்கியத்துடனும், உளவளத்துடனும் மனம் நிறைந்த மகிழ்வுடனும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடுழி வாழ வேண்டுமென்று மனமாரப் பிரார்த்தித்து எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களை வணங்கித் தாழ் பணிகின்றோம்.

**அன்பு மனைவி, மகள், மருமகன்,**
**ஆசைப் பேரப்பிள்ளைகள்,**
**உறவினர்கள், நண்பர்கள்,**
**மாணவ மாணவிகள்.**

**பிறந்தநாள் நல் வாழ்த்துக்கள்**

தென்புலோலியூர்

**உயர்திரு. க.சி.சிவசுப்பிரமணியம்**

(பிரபல ஆங்கில விரிவுரையாளர்)

அப்பமுக்கில் ஆங்கிலத்தை ஆதியுடன் அந்தமென
அப்புவியில் பேர்சொல்லும் ஏற்றமுறு பலபேரை
இப்புவியில் பலர்க்களித்த கொடையாளி
ஏணியென ஏற்றிவைத்த அறிவாளி
செப்பனுறு தமிழோடு இலத்தின் பிரெஞ்செனவே
செல்வங்கள் பலகொண்ட விருந்தாளி
எப்பொழுதும் மாணவர்க்கு இனியனவே புகல்கின்ற
எமதூர் பேராசானே வாழி ! வாழி !

**எமதூர் பேராசானே வாழி ! வாழி !!**

தென்புலோலியூர் **பரா.றமேஸ்**

# எழுதுமட்டுவாழ், நாவற்குழியில் கைவிடப்பட்டன பரிசோதனைகள்

சாவகச்சேரி பெப்ரவரி.8

மாவட்டத்தின் நுழைவாயில்களான எழுதுமட்டுவாழ் மற்றும் நாவற்குழி ஆகிய இடங்களில் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் தினமும் நடத்திவந்த எழுமாறான பி.சி. ஆர்.பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளன.

தூர இடங்களுக்குச் செல்லும் மற்றும் கொரோனாத் தொற்றுடைய பிரதேசங்களிலிருந்து வரும் பயணிகள் வாகனங்கள் மற்றும் மரக்கறிகளை ஏற்றிவரும் வாகனங்கள் என்பன. மேற்குறித்த பரிசோதனைகளால் காலதாமதம் ஆகின்றன என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் ஆயிரத்து 82 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களில் 14 பேருக்கு கொரோனாத் தொற்று இருந்தமை பரிசோதனைகளில் தெரியவந்தது. அவ்வாறு தொற்று இனங்காணப்பட்டவர்களில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மந்துவில் மற்றும் மீசாலையைச் சேர்ந்த இருவர் என மூவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

நுழைவாயில்களில் பி.சி.ஆர். பரிசோதனைகள் நிறுத்தப்பட்ட போதிலும், கொரோனாத் தொற்றுள்ள பிரதேசங்களிலிருந்து தென்மராட்சி பிரதேசத்துக்கு வருகின்றவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு ஏனையோருக்கு தொற்று ஏற்படாமல் தடுக்கவும் தமக்கு தொற்று ஏற்பட்டிருந்தால் சிகிச்சைபெற்று குணமாகவும் தாமாகவே முன்வந்து பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று காணப்படும் கிழக்கு மாகாணம், ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்றனவற்றுக்குச் சென்றுவருவோர் சமூகத்தை வழிநடத்தும் வகையில் செயற்படுமாறும் அறிவித்துள்ளார். (கு-9)

# கல்லூரி மாணவர்களுக்கு நேர்முகப் பரீட்சை!

கொழும்பு, பெப்.8

2020 ஆம் ஆண்டுக்கான தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்குரிய நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தேசிய கல்வியியல் கல்லூரிகளிலும் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

தகுதி பெற்ற விண்ணப்பதாரி களுக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் உரிய கல்வியியல் கல்லூரிகளினூடாக தபால் மூலம் அனுப்பப்படவுள்ளன என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ற-இ)

**வேலையாள்கள் தேவை**

வவுனியாவில் மில் வேலைக்கு
நெல் காயப்போட,
கூலியாள்கள் உடன் தேவை.

**077 668 1671**

**Spoken English & சிங்களம்**

அடிப்படையில் இருந்து மாணவரின் தன்மைக்கு ஏற்ப பூரண தமிழ் விளக்கத்துடன் 100% பேச்சுப் பயிற்சியோடு புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படுகின்றது.
சான்றிதழ் வழங்கப்படும்

**IPS CAMPAS - யாழ். அச்சுவேலி**
**Lect By. SKB. மனோகரன் - ஆசிரியர். அச்சுவேலி.**
**T.P -077 725 4627**

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

இலக்கணப்பிழையின்றி ஆங்கிலத்தில் கதைக்கப்பயில ஆசிரியர் விஸ்வப் பிரம்மஸ்ரீ நடராஜா விக்னேஸ்வரன் ஆச்சாரியார். (24 வருட அனுபவம்)

424/3, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்,
நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை.
Tel: 077 675 1649

**PERSONAL CLASS**

தரம் 6 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் & A/L மாணவர்களுக்க பௌதீகவியல், பொருளியல், வணிகக்கல்வி, உட்பட அனைத்து பாடங்களும் கற்பிக்கப்படும்.

**TP - 0741940026**

**வாடகைக்கு**

மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தில்
4 அறைகளுடன் வீடு
வாடகைக்குண்டு.

**076 559 4813**

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த விவாகரத்துப் பெற்ற 47 வயது நிரம்பிய அரச உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு 35 வயதிற்குட்பட்ட நற்குணங்கள் நிரம்பிய மணமகள் தேவை. சீதனம் வேண்டப்படாது.

**தொடர்பு: 077 197 7564**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 . 06 . 1938

மறைவு 21 . 01 . 2020

**அமரர் செல்லையா சந்திரசேகரம்**

**திதி - 08.02.2021 (துவாதசி)**

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
ஓராண்டாய் சென்று விட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் எங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் - நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

திருவேரகம், கைதடி கிழக்கு, கைதடி.

கோனேஸ்வரன் குடும்பத்தினர், பிரதீஸ்வரன் குடும்பத்தினர், ஈஸ்வரன் குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி ஆன் யோசவ் தி.கு**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கந்தானையை வதிவிடமாக கொண்டவரும், யாழ் திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி ஆன் யோசவ் தி.கு நேற்று (07.02.2021) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிப்பயணத் திருப்பலி நாளை (09.02.2021) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு பாஷையூர் திருக் குடும்ப கன்னியர் இல்லத்தில் ஒப்புக்கெடுக்கப்பட்ட பின்னர், யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121, பிரதான வீதி யாழ்ப்பாணம்.

தகவல் : அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ் மாகாணத் தலைவி.



## மரண அறிவித்தல்



**முருகேசு செல்வமாணிக்கம்**

தோற்றம் 08.09.1932 மறைவு 07.02.2021

அல்வாய் வடக்கு வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வமாணிக்கம் நேற்று (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு தெய்வானை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், தம்பு பாறுபதி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் மற்றும் செல்வனேஸ்வரி, செல்வலிங்கம், குலதெய்வம், மகாதேவன், குமரகுரு, எதிர்வீரசிங்கம், அமுதா, ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ரவேந்திரநாதன், சிவராணி, ரவிமாலா, வதனி, சாந்தினி, அஜந்தா, சுபாகு ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாளன் - சுகன்யா, சஞ்சீவ் -சிந்துஜா, ரஜீவ் - தர்சிகா, பிரணவன், கிருசாந் -அனுஷா, ரவிசாந், நிரூசனன், துஷானி, அபினா, சாருஜா, பிரியாங்கன், தேனுஜா, ஜெனுசிகா, அட்சரா, அஞ்சலா, வினோதன், ஜெவீனா, விஜேத், அட்சயன், பாவனா, ஆருஜன், ஆகியோரின் அன்புப் பேரனும், சுவர்ணவி, சுஜேத், சாத்வீகா, அனுசாந் ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, பூரணம் மற்றும் சரவணமுத்து, நவரத்தினம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சரவணமுத்து- பரமேஸ்வரி, சின்னையா - இரத்தினேஸ்வரி, பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், தவம் - ஸ்ரீபதியின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.02.2021) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
செ.செல்வலிங்கம் ஜெ.சுபாகு 0212262885



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் தகவல் தொழிநுட்பவியல் சிரேஸ்ட ஆசிரியர்

**திரு. விஸ்வநாதன் பாலரூபன்**

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு மிகுந்த மன வேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.



## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 . 05 . 1946

உதிர்வு 10 . 02 . 2010

**திருமதி ருக்மணி நடராசா**

**திதி: 08.02.2021**

எம்மை பெற்று வளர்த்து பேணிக்காத்து
அன்பும் அறிவும் ஊட்டி வளர்த்து
தரணியிலே வாழ வைத்த - எங்கள் தாயே
எம்மை விட்டுப்பிரிந்து பதினொரு ஆண்டுகள்
ஆனபோதும் எம் நெஞ்சத்தில்
உங்கள் நினைவுகள் என்றும்
பசுமையாய் நித்தம் உங்களை அழைக்கிறோம்.
பதினொரு ஆண்டுகள் என்ன நூறாண்டுகள் ஆனாலும்
உங்கள் கள்ளமில்லா சிரிப்பும் நேசமும்
மறைந்து போகுமா?- எம்மை விட்டு
என்றும் உங்கள் நினைவுடன் நாம்

138 A, சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

நடராசா (கணவர்) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 04 . 1960

மறைவு 07 . 02 . 2021

**சிவஸ்ரீ தியாகராஜக்குருக்கள் இராஜலக்சுமி**

தெல்லிப்பழை அமரர் சிவஸ்ரீ தியாகராஜக்குருக்கள் இராஜலக்சுமி அம்மா அவர்கள் 07.02.2021 ஞாயிறு இயற்கை எய்தினார்.

அன்னார் அமரர் தியாகராஜக்குருக்களின் மனைவியும், செந்துரன்சர்மா, கார்த்திகா, அபிராமி, சுந்தராநந்தசர்மா, அமரர் பவித்திரா ஆகியோரின் தாயா ரும், செந்தில்நாதக்குருக்கள், திவ்வியசங்கரசர்மா, தாட்ஷாயினி, அமரர் நளாயினி ஆகியோரின் மாமியாரும், சங்கீர்த்தணசர்மா, நியோத் பவசர்மா, சுவஸ்திகசர்மா, சாத்வீகசர்மா ஆகியோரின் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரிகைகள் 08.02.2021 திங்கள்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல. 90, இலைந்தைக்குளம் வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை. இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P- 0777-502746

தகவல்:குடும்பத்தினர்


# 23ஆம் திகதி இலங்கை வருகிறார் இம்ரான் கான்

கொழும்பு, பெப்.8

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார். இந்த விஜயத்தின்போது பாகிஸ்தான் பிரதமர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக ஜெனிவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படவுள்ள புதிய தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு பெப்ரவரி 23 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இலங்கைக்கு சார்பாக முஸ்லிம் நாடுகளின் ஆதரவைத் திரட்டும் பணியில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரத்தை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ற-இ)

# மலைவேம்பு குற்றிகளை கடத்திச் சென்றவர் கைது

அனுமதிப்பத்திரம் இன்றி ஹன்ரர் வாகனத்தில் 7 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு மலைவேம்புக் குற்றிகளை கடத்திய நபரொருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட வாகனச் சாரதி கோப்பாய்ப் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகின்றது. குறித்த நபர் திருநெல்வேலிப் பகுதியில் இருந்து கோப்பாய்ப் பகுதிக்கு மலைவேம்புக் குற்றிகளை எடுத்துச் சென்றபோது வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், வாகனத்தை மறித்து சோதனையிட்டுள்ளனர். இதன்போது அனுமதிப்பத்திரம் இன்றி அவற்றை எடுத்து சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது வாகனம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (வ-25)

## காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் சாவு

கொழும்பு, பெப்.8

கஹடகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முக்கிரியாவ பகுதியில் காட்டு யானையின் தாக்குதலால் நான்கு பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. முக்கிரியாவ பகுதியில் வயல் காவலுக்காக இரண்டு பேர் சென்று உயரமான குடிசையில் உறங்கிக் கொண்டிருந்தபோது அங்கு வந்த யானை அவர்களில் ஒருவரை இழுத்து வீசியது எனவும் மற்றையவர் தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரியவருகின்றது. (வ-இ)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் தகவல் தொழினுட்பவியல் சிரேஸ்ட ஆசிரியர்

### திரு. விஸ்வநாதன் பாலரூபன்

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கார்த்கேசு சோதிலிங்கம்

**திதி: 08.02.2021**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத்தலைவனே
தங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

போத்தலை,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

**குடும்பத்தினர்.**
**021 205 9255**

## மரண அறிவித்தல்

(இயேசு) "என்னைத் தேடுபவன் என்னை கண்டடைவான்"

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 12 | 31 |
| 12 | 01 |
| 1963 | 2021 |



### திருமதி எமில்டா ஜோசப்பின் ஜெயசீலன்

இராமநாதன் கல்லூரி, பழைய மாணவியும், ஆசிரியரும் யாழ் உடுவிலை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட எமில்டா ஜோசப்பின் அவர்கள் 31.01.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் செல்வம், மேரி திரேசா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் - பிலோமினா தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயசீலனின் (ஜேர்மனி) அன்பு மனைவியும், அனோஜெயனின் அன்புத் தாயாரும், எமில்ஜோன், எமில்ரன் (கனடா), எரிக், ஏனெஸ்ட் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திலகா, றேணுகா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இன்று (08.02.2021) ஜேர்மனியில் 12 மணிக்கு நடைபெறும் இறுதி நிகழ்வு அதே நேரம் இங்கு அவரது இல்லத்தில் 4.30 மணிக்கு நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**தகவல்: எரிக் (சகோதரன்)**
**077 344 5750**

**ஆக் வீதி, உடுவில்.**

# உதயவாசலின் 2ஆவது நிகழ்வாக ஜீவநதி சஞ்சிகை வெளியீடு



யாழ்ப்பாணம், பெப். 8

எழுத்தாளர் கே.ஆர். டேவிட்டின் ஜீவநதி சஞ்சிகையின் சிறப்பிதழ் வெளியீட்டு விழா நேற்று மாலை உதயன் வளாகத்திலுள்ள உதய வாசலில் சட்டத்தரணி, சோ. தேவராசா தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நூலின் வாழ்த்துரையை கவிஞரும், யாழ் மாநகர ஆணையாளருமான த.ஜெயசீலன் நிகழ்த்தினார். அனுபவ உரையை ஜீவநதியின் ஆசிரியர் க. பரணீதரனும், இதழ் பற்றிய உரையை எங்கட புத்தகங்கள் இதழின் ஆசிரியர் கு.வசீகரனும் வழங்கினார். நூலின் சிறப்புப் பிரதிகளை கட்டடக் கலைஞர் இ.மயூரநாதன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், கலாநிதி சிறிகணேசன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். கருத்துரையை எழுத்தாளர் சி.ரமேஸ் வழங்க, ஏற்புரையை நூலாசிரியர் வழங்கினார். இது உதயவாசலில் வெளியிடப்பட்ட இரண்டாவது நூல்வெளியீடு என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### பஞ்சலிங்கம் சந்திரமலர் (ராணி)

அன்னைமடியில்
12.07.1955

ஆண்டவன் அடியில்
12.02.2018

அம்மாவென வந்தெம்மை ஆட்கொண்ட
- இன்னமுதே
மகிழவைக்கும் வரலாறு - நீ அம்மா!
உங்கள் கள்ளமில்லா சிரிப்பழகும்
வள்ளல் குணமாய் எம் இதயத்தில்
- பேசுதம்மா
மூன்றாண்டு கடந்தும் உம்
- நினைவுகள்
மாறவில்லை - தாயே!

காளியானை,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

என்றும் உங்கள் நினைவில்
பிள்ளைகள் : கோபிகா, உமாசங்கர்

## தொற்றுக் குணமாகி 807 பேர் வீடுகளுக்கு





கொழும்பு, பெப.8

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 807 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று ஞாயிற்றுக் கிழமை வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 63 ஆயிரத்து 401 ஆக அதிகரித்துள்ளது. நாட்டில் இதுவரையில் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 68 ஆயிரத்து 576 ஆகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை கொரோனாத் தொற்றுக்குஉள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 351 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## மரண அறிவித்தல்



### இராமச்சந்திரன் வைகுந்தவாசன்

யாழ். பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் வைகுந்தவாசன் நேற்றுமுன்தினம் (06.02.2021) சனிக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் இராமச்சந்திரன் - றஞ்சினி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், கலாறஞ்சன் - அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், நளாயினி அவர்களின் ஆருயிர் கணவரும், நிஷ்மி, பிருத்விகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரஞ்சன், நேருஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ராதிகா, ஜெயரூபன், கஜேந்திரன், கஜதீபன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், நிஷா அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரரும், ஆதித்தன், அனன்ஜா, கஜி, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு மாமனும், நிசாந்தினி அவர்களின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பொன்னாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொன்னாலை தெற்கு,**
**சுழிபுரம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
14 . 01 . 1946



மறைவு
09 . 01 . 2021

## அமரர் திரு. தருமலிங்கம் திருநாவுக்கரசு

**(ஓய்வுபெற்ற அதிபர் SLPS I)**

*அன்பின் ஒளியாய்*
*பண்பின் வழிகாட்டியாய்*
*வாழ்வின் பாடமாய்*
*மூன்றெழுத்து மந்திரமாய்*
*எம் மனங்களில் நிறைந்திருக்கும்*
*அப்பா....*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திப்போம்!*

சங்கத்தானை சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. தருமலிங்கம் திருநாவுக்கரசு அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும் இன்று (08.02.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், சகல வழிகளிலும் பல உதவிகளை புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**2ஆம் ஒழுங்கை,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

# பாவனையற்ற வயல்காணியில் மழை நீரைச் சேகரிக்கத் திட்டம்

சாவகச்சேரி, பெப். 8

மிருசுவில் உசன்வெளியில் தூர்ந்து போயுள்ள வாய்க்காலை தூர் வார்ந்து ஆழமாக்கி வெள்ளம் தேங் காமல் வழிந்தோடக்கூடிய வகையில் அமைப்பதெனவும் தற்போது பாவ னையற்றுக் காணப்படும் வயல் களைக் குளமாக்கி நீரைச் சேமித்து சிறு தானியப் பயிர்கள் உற்பத்திக் குப் பயன்படுத்துவதெனவும் உசன் கமக்கார அமைப்பு முடிவு செய்துள் ளது. உசன் வயல்வெளியில் கடந்த சில வருடங்களாக மழைவெள்ளம் தேங்கிக்காணப்படுவதால் வருடாவரு டம் காலபோக நெற்செய்கை மேற் கொள்ளும் செய்கையாளர்கள் உரிய பயனைப் பெறமுடியாதுள்ளனர்.

இதனால் உரிய தரப்பினருடன் தொடர்புகொண்டு தூர்ந்து காணப் படும் வாய்க்காலை சீரமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அமைப்பின் செயலாளர் அறிவித் துள்ளார். (ப 9)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்துரை கங்காதரன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 01 - 1958 | 01 - 01 - 2019 |

ஆண்டுகள் இரண்டு மறைந்திடினும்
மாறுமோ எம்துயர், மாண்டுவிடவில்லை
நீங்கள் எம் மனங்களில் மறையாது
என்றும் வாழ்கின்றீர்கள்

இன்று (08.02.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது குடும்பத்தலைவரின் இரண்டாம் ஆண்டு சிரார்த்தத்தினம் அவரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம், தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் சூரிச்சை வசிப்பிடமாகவும் கொண்ட

சிவஞானரட்ணம் செல்வக்குமரன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.05.1968 | 21.01.2020 |

திதி: 08.02.2021

ஒரு வருடம் ஓடி இருந்தாலும்
மங்காத நினைவுகளில்
மாறாச் சிரிப்பும் அன்பான
- உங்கள் முகமும்
என்றும் அழியாது - எம்
மனதில் இவ்வுலகில் உங்களுக்கு
நிகர் எதுவும் இல்லை அப்பா!
நினைக்காத நாள் இல்லை! நிஜமாக
வாழ்கின்றோம் - உங்கள் நினைவுகளுடன்
நாம் எங்கு சென்றாலும் உம் நிழலும்
சாயலும் எம்மைத் தொடர்ந்து வர
உம் அருமை அப்பா!
கஷ்டங்கள் பல தாண்டி கரை கண்டு
எமை ஆளாக்கி நன்மை செய்தீரே!
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் நினைவோடு என்றென்றும்
அன்பு மனைவி, பிள்ளைகள் (சுவிஸ்)

## 29ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
இ.ச.பேரம்பலம் E S P
(வாரிவளவு, காரைநகர்)

திதி: துவாதசி (08.02.2021)



நிதானமான பேச்சு!
நேர்மையான கொடுக்கல் வாங்கல்!
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
தரமான பொருளை விநியோகிக்கும்
- தகுதிப்பாடு!
தன்னலம் கருதாமை என எண்ணற்ற
- நற்பண்புகளாய்
ஏற்றம் பெற்று வாழ்ந்தவர் எம் தந்தை
எம்மைவிட்டுப் பிரிந்து விண்ணுலகு - சென்று
இருபத்தொன்பது ஆண்டுகள் - ஆனபோதும்
எம் இதய தடாகத்தில்
என்றும் மலர்கின்ற தாமரையாய்
விண்ணில் விடிவெள்ளியாய் நின்று
எமக்கு ஆசிவழங்கும் அன்புத் - தெய்வத்தின்
ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல - வாரிவளவு
கற்பகவிநாயகரைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கல்விக்காருண்யன்
லயன் E.S.P. நாகரத்தினம் (PMJF)
குடும்பத்தினர்.

383, மனோ ஓசை,
கோயில் வீதி, நல்லூர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 • 11 • 1937 | 09 • 01 • 2021 |



### அமரர் கந்தையா கமலாவதி

மதிமுகம் காண முடியாமல் போனதேன் - உங்கள்
மடிமீது தவழ்ந்து மகிழ முடியாமல் போனதேன்
அழகான திருமேனி அசைபோட்டு நடைபோடும்
நிலை காண முடியாமல் போனதேன்

நெஞ்சமதை மஞ்சமாக்கி எமைத் தாலாட்டி வளர்த்தவளே
கொஞ்சமேனும் எமை கலங்காது காத்தவளே
வஞ்சமறியாப் புண்ணியவதியே எமக்கு தஞ்சம் இனி யாரம்மா
வையகம் உள்ளவரை உம் புன்னகை பூத்தமுகம்
எம் நெஞ்சை விட்டகலாது

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கடந்த 09.01.2021 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் கந்தையா கமலாவதி அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலியும், ஆத்ம சாந்திப் பிராத்தனையும் இன்று (08.02.2021) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தொடர்ந்து மதிய போசனமும் இடம்பெறும். எனவே உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்பாக வேண்டி நிற்கின்றோம்.

மு/புதுக்குடியிருப்பு
நான்காம் வட்டாரம்.

குடும்பத்தினர்
077 328 6751

# ரயிலுடன் மோதி ஒருவர் உயிழப்பு



யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற யாழ்தேவி ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அரியாலை நாவலடிப் பகுதியில், நேற்றுக் காலை நடந்துள்ளது. கனகரத்தினம் வீதி அரியாலைப் பகுதியைச் சேர்ந்த விஸ்வநாதர் பாலரூபன் (வயது-41) என்பரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த அவர், குறித்த பகுதியில் உள்ள ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போதே ரயிலுடன் மோதுண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவரின் சடலம் நாவற்குழி ரயில் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ப-25)

# போர்க்குற்றம் நடைபெறவில்லை; வடக்கு மக்களின் வாக்கே சாட்சி

## அமைச்சர் தினேஷ் புதுக்கதை

கொழும்பு, பெப்.8

2010 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது இறுதிப்போரை வழிநடத்திய இராணுவத் தளபதிக்கே வடக்கில் பெரும்பாலான மக்கள் வாக்களித்தனர். படையினர் போர்க்குற்றம் இழைக்கவில்லை என்பதற்கு இதுவே சிறந்த சான்றாகும் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகில் இன்றளவிலும் தடைசெய்யப்பட்ட அமைப்பாக இருக்கும் புலிகள் அமைப்புக்காக, ஜெனிவா சென்று பொய்யுரைப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். இலங்கையின் இறைமை மற்றும் சுயாதீனத்தில் சர்வதேசம் தலையிட வேண்டும் என்பதே அவர்களின் வலியுறுத்தலாக இருக்கின்றது. இதற்கு உடன்பட முடியாது என நாம் திட்டவட்டமாக அறிவித்துவிட்டோம். போரில் வெற்றிபெறும்போது இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகாவே செயற்பட்டார். அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது புலி ஆதரவாளர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வெற்றிபெற வைப்பதற்காக வாக்குக் கேட்டனர். இதன்படி எம்மைத் தோற்கடித்து வடக்கில் சரத் பொன்சேகாவே வெற்றிபெற்றார். படையினர் போர்க்குற்றம் இழைக்கவில்லை என்ற சான்றே அதன்மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதனை விட வேறு என்ன சான்று வேண்டும்? என்றார். (ப-44)

# இரு பிள்ளைகளின் தந்தை மாயம்!

## பொலிஸில் முறைப்பாடு



வவுனியா, பெப்.8

செட்டிகுளம் சண்முகபுரம் பகுதியில் வசித்து வரும் 2 பிள்ளைகளின் தந்தையான இராமையா நல்லநாதனை காணவில்லை என அவரின் மனைவி செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை கடைக்குச் செல்கிறேன் எனத் தெரிவித்துவிட்டு வீட்டில் இருந்து சென்றுள்ளார். 2 நாள்கள் கடந்தும் வீடு திரும்பவில்லை. அதையடுத்து அவரின் மனைவி பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். (ப-110)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வெடித்தது...

பொத்துவிலில் இருந்து கடந்த 3ஆம் திகதி ஆரம்பமான இந்தப் பேரணி 5ஆம் நாளான நேற்று இரவு பொலிகண்டியை அடைந்தது. அங்கு ஊறணியில் நினைவுக் கல் நடப்பட்டு, பின்னர் ஆலடி சனசமூக நிலையத்தருகே 'பொலிகண்டிப் பிரகடனம்' செய்யப்பட்டு பேரணி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், தன்னெழுச்சியாக மக்கள் திரண்ட போராட்டமாக இது அமைந்துள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் பேரணியில் இணைந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை வேணவாக்களை ஒருமித்த குரலில் உரத்து ஒலித்தனர். சிவப்பு, மஞ்சள் கொடிகளுடன், ஆர்ப்பரித்த மக்கள் கூட்டமும், மிக நீண்ட வாகனத் தொடரணியும் ஒரு தசாப்தத்துக்கு முன்னரான தமிழர் தேசத்தை நினைவுபடுத்தின.

கடந்த 3ஆம் திகதி பொத்துவிலில் இருந்து ஆரம்பித்த இந்தப் பேரணி, அன்றைய தினம் இரவு தாழங்குடாவில் தரித்தது. மறுநாள் தாழங்குடாவில் இருந்து ஆரம்பித்த பேரணி, அன்று இரவு திருகோணமலையில் தரித்தது. மறுநாள் அங்கிருந்து புறப்பட்ட பேரணி அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஊடாகச் சென்று முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் வழியாக வவுனியா நகரை அடைந்து தரித்தது. பின்னர் அங்கிருந்து மன்னார் நோக்கி நகர்ந்து, அதன்பின்னர் நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சியை அடைந்தது. கிளிநொச்சியில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட பேரணி, யாழ்ப்பாணம் வந்து அங்கிருந்து நகர்ந்து நேற்றிரவு பொலிகண்டியை அடைந்தது.

பொத்துவில் முதல் பொலிகண்டிவரையிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் இந்தப் பேரணிக்குப் பேராதரவு வழங்கினர். ஆயிரக்கணக்கான மக்கள் பேரணியில் இணைந்து அரசின் அடக்குமுறைக்கு எதிராகக் குரலெழுப்பினர். தமிழ்த் தேசியக்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து கட்சி பேதங்களைக் கடந்து ஒன்றிணைந்திருந்தன.

முக்கிய இடங்களில் நடைபவனியாகவும், சில இடங்களில் வாகனப் பவனியாகவும் இந்தப் பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணிக்குப் பொலிஸார் சில இடங்களில் நீதிமன்றங்கள் ஊடாகத் தடை உத்தரவு பெற்றிருந்தபோதும், பெரும் திரளான மக்கள் பேரணியில் பங்கேற்றதால், அவர்களைப் பொலிஸாரால் தடுக்கமுடியாது போனது. சில இடங்களில் இந்த மக்கள் போராட்டத்துக்குத் தடை விதிக்க நீதிமன்றங்கள் மறுத்திருந்தன. (எ)

### மக்கள் உற்சாகம்....

அழிப்புக்கு எதிராகவும் கடந்த 3ஆம் திகதி ஆரம்பித்த "பொத்துவில் முதல் பொலிகண்டிவரை" கவனவீர்ப்புப் பேரணி நேற்று நிறைவுபெற்றது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நீண்ட காலத்துக்குப் பின்னர் ஆயிரக்கணக்கானோர் தன்னெழுச்சியுடன் கலந்துகொண்டனர்.

இந்தப் பேரணி நகர்ந்த இடமெல்லாம் அந்தந்தப் பகுதி மக்களும், வர்த்தகர்களும் பெரும் ஆதரவு வழங்கினர். குளிர்பானங்கள், உணவு வகை, தண்ணீர் என்று பலதையும் தாங்காக முன்வந்து கொடுத்து போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை உற்சாகப்படுத்தினர்.

வீதிகள்தோறும் வீடுகளுக்கு முன்பாக நின்ற மக்கள் பேரணிக்கு கையசைத்து உற்சாகமான வரவேற்பு அளித்ததுடன், வீடுகளுக்கு முன்பாக தண்ணீர் பந்தல் அமைத்து பேரணியில் வந்தவர்களுக்கு குளிர்பானங்கள் வழங்கியதையும் காண முடிந்தது. (எ-10)

### பொலிஸார்...

குறுக்கே தடை ஏற்படுத்த முயற்சித்தனர். பேரணியில் கலந்துகொண்டோரைப் பதிவு செய்தே தொடர்ந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என்று பொலிஸார் தர்க்கப்பட்டனர்.

பேரணியில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டிருந்த நிலையில், பொலிஸாரின் நடவடிக்கைக்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதையடுத்து பொலிஸார் பேரணியைத் தடுக்கும் முயற்சியைக் கைவிட்டு அங்கிருந்து நகர்ந்தனர். அதன்பின்னர் பேரணி பொலிகண்டி நோக்கி நகர்ந்தது. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடிப் பொலிஸாரும் நீதிமன்றக் கட்டளையைக் காட்டி பேரணிக்குத் தடை ஏற்படுத்த முயன்றனர். எனினும் அது பயனளிக்கவில்லை. (எ-26)

### பல்கலைக்கழக....

அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்தும், வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகவும் முன்னெடுக்கப்பட்ட "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை" கவனவீர்ப்புப் பேரணி நேற்று நிறைவடைந்தது.

நேற்றுக்காலை கிளிநொச்சியில் இருந்து புறப்பட்ட பேரணி பிற்பகல் யாழ்ப்பாணத்தை அடைந்தது. யாழ்ப்பாணம் நகரை அடைந்த பேரணி, தமிழாராய்ச்சி படுகொலை நினைவிடத்தை அடைந்தது. அங்கிருந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குச் சென்றது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வாயிலுக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் பிரகடனம் செய்யப்பட்டு, முள்ளிவாய்க்கால் மண்ணில் இருந்து எடுத்துவரப்பட்ட முள்ளிவாய்க்கால் மண், மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் இந்த மண் பயன்படுத்தப்படவுள்ளது.

அங்கிருந்து நகர்ந்த பேரணி நல்லூரை அடைந்தது. அங்கு தியாகி திலீபன் நினைவுத் தூபியில் உயர்வெழுச்சியுடன் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. அஞ்சலியின் பின்னர் பேரணி பொலிகண்டி நோக்கி நகர்ந்தது. (எ)

### மலரும்....

கான மக்கள் தன்னெழுச்சியுடன் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் இணைந்து கொண்டு தமிழ் மக்களின் வேணவாக்களை வெளிப்படுத்தியிருந்தனர். பொங்கு தமிழ் நிகழ்வு, சமாதான காலத்தில் விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண மீள்வருகை என்பவற்றில் காணப்பட்ட மக்கள் எழுச்சி இந்தப் போராட்டத்திலும் காணப்பட்டது.

கவனவீர்ப்புப் பேரணி யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றபோது, செம்மணியில் கடும் போக்குவரத்து நெரிசல் நிலைமை ஏற்பட்டது. அப்போது அங்கு நின்ற முதியவர் ஒருவர், "இப்படி எழுச்சியான மக்கள் கூட்டத்தைப் பார்க்கும்போது, சமாதான காலத்தில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் வந்தபோது அவர்களை வரவேற்க வந்திருந்த மக்கள் கூட்டம் தான் நினைவுக்கு வருகின்றது. இந்தளவு இளைஞர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வார்கள் என்று நினைக்கவில்லை. இதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாகவும், நம்பிக்கையாகவும் இருக்கின்றது" என்று நெகிழ்ச்சியுடன் அருகில் இருந்தவரிடம் கூறியதைக் கேட்க முடிந்தது. (எ-10)

### மயங்கி....

கொண்டனர்.

இந்த கவனவீர்ப்புப் போராட்டம் கிளிநொச்சியை அடைந்தபோது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் போராட்டத்துடன் இணைந்தனர்.

கவனவீர்ப்புப் போராட்டம் நடந்தபோது, இராணுவத்திடம் ஒப்படைத்த தனது உறவுகளை 12 ஆண்டுகளாகத் தேடியலையும் பெண் ஒருவர் கதறி அழுது மயங்கி விழுந்தார். தன் உறவுகளை நினைத்து அவர் கதறி அழுதமை அங்கிருந்த அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது. (எ-10)

### முஸ்லிம்கள்....

வில் தொடக்கம் பொலிகண்டிவரை" கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று நிறைவடைந்தது.

இந்தப் போராட்டத்துக்கு முஸ்லிம் சமூகத்தினரும் பெரும் ஆதரவு வழங்கியிருந்தனர். பேரணி நகர்ந்து வந்த இடங்களில் பேரணியில் இணைந்து கொண்டு தமிழ் பேசும் மக்களின் குரலை வலுப்படுத்தியிருந்தனர்.

நேற்று இந்தப் பேரணி எழுதுமட்டுவாழ் பகுதியில் நகர்ந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினர் அசாத் சாலியும் இணைந்து கொண்டார்.


"சிறுபான்மை இனங்கள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டியது அவசியம். ஜனாஸா எரிப்பு விடயத்தில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மௌனமாக இருந்தும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே குரல் எழுப்பினார்கள். அதை மறக்கவோ, மறுக்கவோ முடியாது. சிறுபான்மை இனங்கள் ஒன்றுமையாகச் செயற்பட வேண்டும்." என்றார். (எ-10)

# இந்திய அணி தடுமாற்றம் இங்கிலாந்து பேரெழுச்சி!!

சென்னை, பெப். 8

**இந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாள் நிலவரத்தின்படி இங்கிலாந்து அணி பேரெழுச்சி பெற்றுள்ளது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 555 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பெஸ் 28 ஓட்டங்களுடனும், லீச் 6 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். 34 ஓட்டங்களுடன் பும்ராவின் பந்துவீச்சில் வீழ்ந்தார் பெஸ். அண்டர்சன் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 578 ஓட்டங்களைப் பெற்றது.



பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரரான ரோகித் சர்மா 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் விளையாடிய கில் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் கோலி 11 ஓட்டங்களுடனும் துணைத்தலைவர் ரகானே ஓர் ஓட்டத்துடனும் அடுத்தடுத்து வீழ்ந்தனர். ஒரு கட்டத்தில் 73 ஓட்டங்களுடக்கு 4 இலக்குகளை இழந்து தவித்தது இந்திய அணி.

புஜாரா, பன்ட் இணைந்து அணியை மீட்டெடுத்தனர். அரைச்சதம் கடந்தார் புஜாரா. அவர் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் அதிரடி காட்டிய பன்ட் 91 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். வெறும் 88 பந்துகளில் இந்த ஓட்டங்களை பன்ட் பெற்றார்.

225 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது இந்தியா.

அதன் பின்னர் சுந்தர், அஸ்வின் இருவரும் இணைந்து நாள் முடிவுவரை தாக்குப்பிடித்தனர். நாள் முடிவில் இந்திய அணி 6 இலக்குகளை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. சுந்தர் 33 ஓட்டங்களுடனும் அஸ்வின் 8 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

(ம)


## தேவை

மருந்தாளர் அனுமதிபத்திரம் உடனடியாக தேவை.
(Pharmacist Licence)
077 950 7546

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

வாடிக்கையாளர் கவனத்திற்கு....
யாழ்ப்பாணத்தில் பொருட்களை மொத்தமாகவும் சில்லரையாகவும் பெற்றுக் கொள்ளலாம். 01.01.2021ம் திகதியிலிருந்து இயங்கிவரும் கடையில் (07.02.2021) இன்று முதல் அழகு சாதனபொருட்கள், அன்பளிப்பு பொருட்கள், சில்வர் பொருட்கள், மாபிள் பொருட்கள், கிளாஸ் வகைகள், பிளாரிக் பொருட்கள், கயிறு வகைகள், தையல் உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள் போன்ற இவை அனைத்தயும் பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்: தே.கலைத்தாசன்(கரன்)
T.P: 077 4683 354
சரவணபவன் பான்சிகவுஸ்
26/1 ஜிம்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பானம்.


## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரி உணவகத்திற்கு வரவேற்பாளர், பரிமாறுபவர், அலங்கார பொருள்கள் விற்பனை நிலையத்திற்கும், பழச்சாறு விற்பனை நிலையத்திற்கும், வேலையாள்கள் தேவை. (30 வயதுக்குட்பட்ட இருபாலாரும்) தங்குமிட வசதி உண்டு. சம்பளம் 20,000,00 - 25,000,00
Sweet Park., Chavakachcheri
021 430 8743, 076 191 1884


## இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் 15,000 ரசிகர்களுக்கு அனுமதி!

சென்னை, பெப். 8

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தை 15 ஆயிரம் ரசிகர்கள் பார்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் சென்னையில் தற்போது நடைபெற்று வருகின்றது. கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக இந்த ஆட்டத்தைப் பார்க்க ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது கொரோனா சமூகத்தொற்றுக்கான வாய்ப்புக்கள் குறைக்கப்பட்டுள்ளதால் இரண்டாவது ஆட்டத்தைப் பார்ப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 13ஆம் திகதி சென்னையில் இடம்பெறும் ஆட்டத்தைப் பார்க்க 15 ஆயிரம் ரசிகர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.



(ம)

## ம[illegible]ணல் ஏற்றியவருக்கு 50,000 ரூபா அபராதம்

ய[illegible]ப்பாணம், பெப்.8

அ[illegible]ுமதிப் பத்திரம் இன்றி ஹன்ரர் வ[illegible]னத்தில் மணல் ஏற்றிச் சென்ற ச[illegible] ஒருவருக்கு 50ஆயிரம் ரூபா அ[illegible]ாதம் விதிக்கப்பட்டுள்ளது. துன்ன[illegible]லைப் பகுதியைச் சேர்ந்த சாரதி ஒ[illegible]வருக்கே இந்த அபராதம் விதிக்க[illegible]ட்டது. சம்பவம் தொடர்பில் ெ[illegible]லியடிப் பொலிஸாரால் கடந்த ெ[illegible]ளிக்கிழமை குற்றப்ப த்திரம் ம[illegible]ில் தாக்கல் செய்யப்பட்டது.



வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் காயத்திரி சயிலயன் அபராதம் விதித்ததுடன் மணலைப் பறிமுதல் செய்து வாகனத்தை உரிமையாளரிடம் ஒப்படைக்க உத்தர விட்டார்.

(வ-25)


## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 03 . 1936



மறைவு 20 . 01 . 2012

மீசாலை
அமரர் திருமதி **புஸ்பலதிகவதி கணேசலிங்கம்**
( இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி வலயம் )
திதி: அபரபக்க துவாதசி

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே!
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே!
அதிகாலை எழுந்ததும் நின்முகம் தேடும் நமைவிட்டு
கணப் பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ?
ஆண்டுகள் ஒன்பதாகி தவிக்கின்றோம் உனைப்பிரிந்து
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

35/1 A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.
"சிவகிரி", மீசாலை வடக்கு, மீசாலை.
72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி




இ[illegible]திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.